489



489



# வித்தியா மாலிகை

## மூன்றும் புத்தகம்

# VIDYA MALIKA SERIES

## THIRD BOOK

MADRAS

UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE
CEYLON BRANCH
1, Consistory Buildings, Front St., Colombo 11
1948

TB
031 (4
M48
136807

# வித்தியா மாலிகை

## மூன்றும் புத்தகம்

(நான்காம் வகுப்புக்குரியது)

---

# VIDYA MALIKA SERIES

## THIRD BOOK

(FOURTH CLASS)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 SEP 1948
MADRAS

THE UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE
CEYLON BRANCH
1, CONSISTORY BUILDINGS, FRONT ST., COLOMBO 11
1948

COPYRIGHT

*18th Edition 1948* AM

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
136807
சென்னை-600 008.

T3
03(A)
N48

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS—4-8-1948 B 7138

# பொருள் அட்டவணை


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | சத்திய பூஷண மாலை.—The Necklace of Truth... | 1 |
| 2. | தபால் துண்டுக்கடிதம் செய்த பிரயாணம்.—The Travels of a Post Card ... ... ... ... | 4 |
| 3. | குருடர்கள்.—The Blind ... ... ... | 10 |
| 4. | சென்னையிலிருந்து எழுதின ஒரு கடிதம்—A Letter from Madras ... ... ... ... ... | 13 |
| 5. | கையெழுத்து.—Hand-Writing ... ... ... | 19 |
| 6. | பறக்கும் மீன்.—Flying Fish ... ... | 20 |
| 7. | மூன்று புத்திரரும் பதினேழு யானைகளும்.—The Three Sons and the Seventeen Elephants ... ... | 23 |
| 8. | ஒட்டகம்.—The Camel ... ... ... ... | 25 |
| 9. | மழை.—Rain ... ... ... ... ... | 28 |
| 10. | உபகாரத்துக்கு அபகாரம்.—Ingratitude ... ... | 32 |
| 11. | முத்து.—The Pearl ... ... ... ... | 35 |
| 12. | முத்துச் சிப்பி.—The Pearl Oyster ... ... | 36 |
| 13. | முத்துக் குளிப்பு.—The Pearl Fishery ... ... | 38 |
| 14. | மதியூகி மந்திரி.—The Wise Minister ... ... | 41 |
| 15. | நாயும் எஜமானும்.—The Dog and its Master ... | 50 |
| 16. | எதிரொலி.—The Echo ... ... ... ... | 51 |
| 17. | வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.—The Clever Ferryman ... ... ... ... ... ... | 53 |
| 18. | கழுகு.—The Eagle ... ... ... ... | 55 |
| 19. | கழுகும் குழந்தையும்.—The Eagle and the Child... | 56 |
| 20. | நீதிமொழிகள்.—Precepts ... ... ... ... | 58 |
| 21. | நெருப்புக்கோழி.—The Ostrich ... ... ... | 60 |
| 22. | இரக்கமுள்ள கொல்லன்.—The Blacksmith who sacrificed himself ... ... ... ... | 63 |

பாடம் பக்கம்

23. பிறனுக்கு நன்மை செய்பவன்.—Who loves his Neighbour? ... ... ... ... ... 65
24. தேக்கமரமும் நாணற் புல்லும்.—The Teak Tree and the Reed ... ... ... ... ... 68
25. வெட்கமடைந்த வேட்டைக்காரர்.—The Dismayed Hunters ... ... ... ... ... 70
26. விநோத சித்திர வீடுகள்.—Strange Homes... ... 73
27. சுகவழி.—Health ... ... ... ... ... 75
28. வச்சிரக்கல்.—The Story of the Diamond ... 77
29. பிரார்த்தனை.—Prayer ... ... ... ... 83

செய்யுட் பாடம்

வெற்றிவேற்கை (சுருக்கம்) ... ... ... 85
மூதுரை (சுருக்கம்) ... ... ... ... 88
அரும்பத விளக்கம் ... ... ... ... 90

# வித்தியாமாலிகை

## மூன்றாம் புத்தகம்



### 1. சத்திய பூஷண மாலை (முதலாம் பாகம்)

முத்தம்மாள் என்னும் ஒரு சிறு பெண் இருந்தாள். அவள் பல நற்குணங்களிற் சிறந்தவளாயிருந்தாலும், அவளிடத்தில் ஒரு குறையுண்டு. அதென்னவென்றாற் பொய்பேசும் பழக்கமே. அவளுடைய தாய் தகப்பன்மார் இதைப்பற்றி விசனமடைந்து, அவளுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிவந்தும், அவள் கேட்கவில்லை. அப்படியிருக்க, அவ்வூரிலே சத்தியகீர்த்தியென்னும் ஒரு பெரிய வித்துவானிருந்தார். அவர் யதார்த்தத்தைப்பற்றி மற்றவர்களுக்குப் போதனை செய்துவந்தார். அங்குள்ளோர் பொய்பேசும் பிள்ளைகளை அவரிடத்திற்கு அழைத்துக்கொண்டு போவார்கள். இதைக் கேட்டு முத்தம்மாளையும் அவரிடத்தில் அழைத்துப் போனால் நலமாயிருக்குமென்று, பெற்றோர் தீர்மானம் செய்தார்கள். அந்த வித்துவான் ஒரு பளிங்கு மாளிகையில் வாசஞ்செய்தார். அங்கே பெற்றோர் முத்தம்மாளைக் கொண்டுபோய் வித்துவான்முன் இருத்தி அவளுக்குப் புத்தி போதிக்கும்படி வேண்டினார்கள். வித்துவான் பெற்றோரைப் பார்த்து ‘உங்கள் குமாரத்தி அடிக்கடி

பொய்பேசுவாள் அல்லவா?' என்று கேட்டார். இதைக் கேட்டு முத்தம்மாளுக்கு அதிக வெட்கமுண்டாகவே சத்தியகீர்த்தி அவளைப் பார்த்து 'மகளே! பயப்படாதே, உன்னைத் தண்டிக்கமாட்டேன். உனக்கோர் ஆபரணந் தருகிறேன்' என்று சொல்லி ஒரு பெட்டியைத் திறந்து அதிலிருந்து பலவர்ணக் கற்கள் இழைத்த ஒரு மாலையை யெடுத்து, அவளுடைய கழுத்தில் அணிந்தார். பிற்பாடு அவர் அவளை நோக்கி 'இம்மாலை ஒருகாலும் உன்னால் எடுக்கக்கூடியதல்ல என்பதைத் திட்டமாயறிந்துகொள்' என்று சொல்லி, முத்தம்மாளையும் அவள் பெற்றோரையும் வீட்டிற்கு அனுப்பினார்.

## சத்திய பூஷண மாலை (இரண்டாம் பாகம்)

அடுத்தநாள் வழக்கப்படி முத்தம்மாள் பள்ளிக் கூடத்திற்குப் போனபோது பள்ளித்தோழிகள் அவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டுச் சூழ்ந்து நின்றார்கள். அவர்கள் 'இந்த மாலையை நீ எங்கே வாங்கினாய்' என்று கேட்டார்கள். முத்தம்மாள் 'என் தகப்பனார் நேற்றுத்தான் கொடுத்தார்' என்று பொய் சொன்னாள். உடனே மாலையிலுள்ள இரத்தினங்கள் ஒளி மங்கி அழகுகுறைந்து, வழியிற் கிடக்குஞ் சாதாரணக் கற்களைப்போற் கறுத்துப் போயின. சிநேகிகள் இதைக்கண்டு 'ஐயோ, இதென்ன ஆச்சரியம்! மணிகள் ஒளிமழுங்கிப்போயினவே' என்று சொன்னார்கள்.

முத்தம்மாள் 'உண்மை சொல்லுவேன், கேளுங்கள்: வித்துவானாகிய சத்தியகீர்த்தி இதை எனக்குக் கொடுத்தார்' என்று மெய் சொன்னாள். உடனே மாலை முன்போற் பிரகாசித்தது. தோழிகள் இதைக்கண்டு பொய் பேசுகிற பிள்ளைகளைச் சத்தியகீர்த்தியிடங் கொண்டு போவது வழக்கமாகையால் பெற்றோர்கள் இவளையும் அங்கே கூட்டிக்கொண்டு போயிருக்கலாம் என்று



அறிந்து சிரித்தார்கள். அப்போது முத்தம்மாள் கோபங் கொண்டு 'நீங்கள் நகைக்கவேண்டாம். வித்துவானுகிய சத்தியகீர்த்தி என்னைத் தன் மாளிகைக்கு அழைத்துப் போவதற்காக இரண்டு பெரிய யானைகளும் ஒரு பல்லக்கும் என் வீட்டுக்கு அனுப்பினுர்' என்று பெருமையாய்ச் சொன்னுள். உடனே அந்த மாலை கழுத்திலிருந்து தரை மட்டும் நீண்டது. முத்தம்மாள் நடுநடுங்கி 'நான் சொன்னது பொய்யே. என் குற்றத்தினிமித்தம் என் தாய்தந்தையர் என்னை அந்த வித்துவானிடங் கூட்டிக் கொண்டு போனுர்கள்' எனவே, அந்த மாலை முன்னிருந்த படி யாகிவிட்டது. அப்போது அத்தோழிகளில் ஒருத்தி 'மாலை கொடுத்தபோது அவர் என்ன சொன்னுர்?' என்று வினவ, முத்தம்மாள் '"உண்மையுள்ள பிள்ளையே! உனக்கு இந்த மாலையைக் கொடுக்கிறேன்" என்று சொன்னுர்' என்றுள். அப்போது அந்த மாலை அவள் கழுத்தை இறுக்கி நெரித்தது. முத்தம்மாள் நோவு சகிக்கமுடியாமல் 'ஐயோ! நான் பொய் சொன்னேன்' என்று அலறி

உண்மையெல்லாம் வெளியிட்டாள். உடனே மாலை முன் போலாகிவிட்டது.

முத்தம்மாள், தான் மற்றவர்களை ஏமாற்றிப் பொய் பேசினுல், இந்த மாலை ஒரு மாறுதல் அடைகிறது என்றும் அதனுல் தன் பொய்யை மற்றவர்கள் உணர்ந்து கொள்ளுகிருர்கள் என்றும் பயந்து அதைக் கழற்ற முயன்ருள். அவள் முயன்ருலும் வித்துவான் சொல்லியபடி அது முடியவில்லை. அதனுல் அவள் 'இனிமேற் பொய்சொல்லமாட்டேன்' என்று உறுதியான தீர்மானம் செய்து, அதன்படி நடக்கப் பிரயாசப்பட்டாள்.

சத்தியகீர்த்தி முத்தம்மாளுடைய நல்ல கருத்தை உணர்ந்து, அவள் வீட்டுக்கு வந்து அவளைப் பார்த்து: 'மகளே! இனி நீ அஞ்சவேண்டாம். நீ பொய் பேசாதிருந்தால், இம்மாலை உலகத்திலுள்ள மற்றைய ஆபரணங்களைவிட உனக்கு மிக்க அழகைக் கொடுக்கும்' என்று சொல்லி ஆசீர்வதித்து, விலையுயர்ந்த அந்த மாலையை வெகுமதியாக அவளுக்கே ஈந்து தம்மிடத்திற்குப் போய்விட்டார்.

இந்த மாலையால் முத்தம்மாள் பேரழகைப் பெற்றது போல நாமும் மிக்க அழகுபெற விரும்பினுற் பொய்யையொழித்துச் சத்தியத்தையே பேசவேண்டும்.

'மெய் சொல்லிக் கெட்டவனு மில்லை
பொய் சொல்லி வாழ்ந்தவனு மில்லை.'

## 2. தபால் துண்டுக்கடிதம் செய்த பிரயாணம்
(முதலாம் பாகம்)

சென்னையைச் சார்ந்த மைலாப்பூரில் உள்ள ஒரு பிச்சைக்காரன் வழியிலே போஸ்ட் கார்டு என்னும் ஒரு துண்டுக் கடிதத்தைக் கண்டு அதை யெடுத்துப் பார்த்து 'ஐயோ! இதை ஐந்து ரூபாய் நோட்டென்று நினைத்தேன். அப்படியில்லாமல் இது உபயோகமற்ற காகிதமா

யிருக்கிறது. எத்தனையோ இடமெல்லாந் திரிந்தும் என் கஷ்டம் நீங்கவில்லையே' என்று அவன் விசனப்பட்டான்.



அப்போது தபாற் கடிதம் அவனைப் பார்த்துச் சொன்னதாவது: "நான் அநேக விடங்களில் திரிந்தேன் என்றும் அதிகக் கஷ்டப்பட்டேன் என்றும் சொல்லுகிறாய். நான் என் வரலாறு சொல்லுகிறேன் கேள்:

என் பிறப்பிடம் லண்டன்மாநகரம். அங்கே சிலர் என்னை அச்சிட்டார்கள். அவர்கள் என்னையும் என்னைப்போல அச்சிடப்பட்ட வேறு அநேக காகிதங்களையும் கட்டி ஒரு பெட்டிக்குள் வைத்துக் கப்பலிற் போட்டார்கள். சுமார் ஒரு மாதம் வரையில் நான் கப்பலிலிருந்தேன். அங்கிருந்து கப்பல் கல்கத்தாத் துறைமுகம் வந்தவுடனே அங்குள்ளவர்கள் பெட்டியை ஒரு வண்டியிலேற்றிப் பெரிய ஒரு சாலையிற் கொண்டுபோய் வைத்தார்கள்.. அங்கே சில நாளிருந்தேன். பின்பு அவர்கள் அங்கிருந்து என்னையும் வேறு சில காகிதங்களையும் எடுத்து ஒரு பெட்டிக்குள் வைத்து ஆணிகளடித்து ஒரு புகைவண்டியிலேற்றினார்கள். இதுதான் என் கஷ்டத்திற்கு ஆரம்பம்.

அங்கிருந்து நான் சென்னை வந்து சேர்ந்து ஓர் புகைவண்டிச் சாலையிற் கிடந்தேன். பிற்பாடு சில உத்தியோகஸ்தர் கடற்கரையோரத்திலுள்ள பெரிய சாலையொன்றிற்கு எங்களைக் கொண்டுபோய்ப் பெட்டியை யுடைத்து எங்களை எடுத்து வேறு பெட்டியிற்போட்டு வைத்தார்கள். அங்கேயாவது நான் சிலநாளிருக்கலாம் என்று நினைத்தேன். உடனே ஒருவன் வந்து என்னையும் என்

ஞேடிருந்த கடிதங்களையும் ஒரு பெரிய பையிற் போட்டு முத்திரை வைத்து வேருெரு புகைவண்டியிற் போட்டான். சென்னையிலிருந்து நான் புகைவண்டி மார்க்கமாகப் புறப்பட்டு மிக்க அவஸ்தைப்பட்டு மலைத்தேசமாகிய உதகமண்டலம் போய்ச் சேர்ந்தேன்.

அங்கேயாவது சுகமாயிருக்க விட்டார்களா? இல்லை. தபாற்சாலை சேர்ந்தபோது இரக்கமில்லாத அச்சாலை அதிபர் என்னை இன்னுஞ் சில கடிதங்களோடு வெளிக் கிராமங்களுக்குத் தபால் எடுக்கச் செல்லும் ஒரு சேவகனிடங்கொடுத்தார். அந்தத் தபாற்சேவகன் ஒரு தோற் பைக்குள் என்னைவைத்து மூடிக் கிராமங் கிராமமாகத் தெருத் தெருவாகச் சுற்றினன். சில தெருக்களில் வைத்திருக்கும்பெட்டிகளைத் திறந்து அவைகளிலிருந்த கடிதங்களையும் எடுத்து நாங்களிருந்த பைக்குட் போட்டான்.




## தபால் துண்டுக்கடிதம் செய்த பிரயாணம்

(இரண்டாம் பாகம்)

நான் அக்கடிதங்களைப் பார்த்துப் பிரமித்து, 'சிநேகிதர்களே! உங்கள் உடம்பெல்லாம் என்ன கீறியிருக்

கின்றதே, அதென்ன?' என்று கேட்டேன். அவைகள் என்னைப்பார்த்து 'சிநேகிதா! நீ சவுக்கியமாயிருக்கிறாய். நாங்களோ எங்களை வருத்தப்படுத்துவோர் கையி லகப் பட்டோம். அவர்கள் எங்களைப் பேனாக்களினால் கீறிக் கீறி மறுப்படுத்தினார்கள். இரண்டு பக்கங்களையும் நீ பார்' என்று சொல்லி வருத்தப்பட்டன.

இதைக்கேட்டு எனக்கும் இப்படிச் சம்பவிக்குமோ என்று நான் பயப்பட்டுக்கொண்டிருக்கையில், ஒரு பையன் ஓடிவருகிறதைக் கண்டேன். அவன் தபாற் சேவகனிடம் முக்காலணா கொடுத்து 'ஒரு கார்டு கொடு' என்று கேட்டான். அந்தச் சேவகன் என்னையே எடுத்துக் கொடுத்தான்.

அந்தப் பையன் என்னைத் தூரத்திலுள்ள ஒரு கிராமத்துக்குக் கொண்டுபோய் தன் வீட்டிலே மரப்பெட்டியிற் போட்டுவைத்தான். பின்பு அவன் ஒருநாள் என்னை எடுத்து என் இரண்டு பக்கங்களிலும் கீறிக் கீறிக் கறுப்பாக்கிவிட்டான். அதற்குமுன் அழுக்குப்படாமலும் கிழிபடாமலும் என்னைப் பலர் பத்திரமாய் வைத்துக் காப்பாற்றினார்கள். பையன் எழுதியது முதற்கொண்டு ஒருவரும் என்னை முன்போலப் பேணவில்லை. அது தொடங்கி நான் பெருங் கஷ்டப்பட்டேன்.

மறுநாள் குன்னூரிலே சந்தையாகையால் அந்தப் பையன் கீரை முதலிய சாமான்கள் விற்பதற்காகப் போகையில் என்னைத் தன் மடியிற் கட்டிக்கொண்டு போய், அங்கே தெருவில் நாட்டியிருக்கும் சிவப்புநிறம் பூசிய தூண்போன்ற ஒரு பெட்டிக்குட் போட்டான். அங்கே நான் சிறிது நேரமிருந்தேன். பின்பு ஒரு சேவகன் அந்தப் பெட்டியைத் திறந்து என்னையும் என்னோடிருந்த மற்றக் கடிதங்களையும் எடுத்துத் தபாற்சாலைக்குக் கொண்டுபோனான். அங்கே என்னைக் கழுவிச் சுத்தப்படுத்துவார்களென்று நினைத்தேன். அவர்கள் எங்களை

ஒரு மேசையின்மேற் போட்டுத் தலையின்மேல் முத்திரை அடித்தார்கள். நான் பயந்து கூட இருந்த கடிதங்களுக்கு நடுவே புகுந்தும் அவர்கள் என்னை விட்டார்களா? ஐயோ! என்னைக் கண்டதும் மிகுந்த கோபங்கொண்டு ஓர் இருப்புக் கருவியினால் ஓங்கி விசையாகப் பளீரென்று சத்தங் கேட்கும்படி என் தலையிலே அடித்தார்கள். அந்த அடியால் என் தலை நசுங்கிவிட்டது. அந்தக் காயம் இன்னுமிருக்கிறது பார். அந்த அடிக்குப் பிற்பாடாவது என்னை விடுவார்களென்று நினைத்தேன். அப்படியின்றி ஒரு பெரிய பைக்குள்ளே என்னை மற்றக் கடிதங்களோடு சேர்த்து, நாங்கள் வெளியே போகாதபடி அதன் வாயைக் கயிற்றினால் கட்டி, அரக்கு முத்திரை வைத்து, ஒரு மனிதனிடங் கொடுத்தார்கள். அவன் அதைத் தோளின்மேற் போட்டுக்கொண்டு, நாங்கள் 'குலுங்கக் குலுங்க' ஓடிப்போய் ஒரு புகைவண்டி அறையிலே 'தொப்' என்று போட்டான். அங்கே சற்று நேரம் என்னை ஒருவருங் கவனிக்கவில்லை.

## தபால் துண்டுக்கடிதம் செய்த பிரயாணம்
### (மூன்றும் பாகம்)

நானிருந்த வண்டி வேகமாய்ப் பெருத்த சத்தமிட்டுக்கொண்டு ஓடினது. நானும் என்னைச் சேர்ந்தவைகளும் அச்சங்கொண்டு ஒரு மூலையில் அசையாமலிருந்தோம். இப்படி அந்த வண்டி மலையிலிருந்து இறங்கி அடிவாரத்திலிருக்கும் மேட்டுப்பாளையம் என்னும் இடத்தைச் சேர்ந்தது. அங்கே எங்களை அந்த வண்டியிலிருந்தெடுத்துப் பிறிதொரு வண்டியிற் சேர்த்தார்கள். குன்னூருக்கும் இந்த இடத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருப்பதாக நான் அறிந்தேன். அங்கே நான் அதிக குளிர் பிடித்தவனாயிருந்தேன். இங்கேயோ குளிர் ஓடிப்போகச் சூரியகாங்கை யதிகரித்தது. சில நிமிஷம்.

போனதும் யாரோ ஒரு புண்ணியவான் நானிருந்த கோணிப்பையை யவிழ்த்து எங்களை வெளியே எடுத்து



மேசையின்மேல் வைத்தான். நான் பகல்போல விளங்கும் விளக்கு வெளிச்சத்திற் சில மணிநேரஞ் சுகமாயிருந்து போத்தனூர் முதலிய சில இடங்களைப் பார்த்துக்கொண்டு சந்தோஷமாய்ச் சென்றேன். போகும்போது அங்குள்ளவர்கள் அந்தந்த இடங்களிற் சிற்சில காகிதங்களை எடுத்துப் பைகளிற் போட்டு, வெளியில் அனுப்பினார்கள். எனக்கும் அந்தச் சங்கடம் நேரிடுமோ என்று பயந்தேன். ஆனால் அவர்கள் என்னை யொன்றுஞ் செய்யவில்லை. கடைசியில் ஒரு பெரிய பையில் என்னையும் மற்றவர்களையும் போட்டார்கள். அங்கே




சிலர் வந்து வெகு மரியாதையாய் எங்களை எடுத்து ஒரு குதிரைவண்டியில் ஏற்றிக்கொண்டுபோனார்கள். நாங்கள் அதிகச் சந்தோஷப்பட்டு, இவர்கள் எங்களைச் சுக

மாய் வைத்திருப்பார்கள் என்று நினைத்தோம். அவர்களோ எங்களைத் திருவல்லிக்கேணியிலுள்ள தபாற்சாலையிற் கொண்டுபோய்ப் போட்டார்கள். அங்கும் முன்போலவே என்னை அடித்து வடுப்பண்ணினார்கள். பிற்பாடு ஒரு தபாற்சேவகன் தன் தோற்பையில் என்னை வைத்து வீதி வீதியாய்த் திரிந்து ஒரு வீட்டிற்குப் போய் அங்குள்ள ஒரு பையனிடம் என்னைக் கொடுத்தான். அவன் வாங்கி என்மேலுள்ள கீறுகளை அதிக ஆவலுடன் பார்த்தான். இவன் என்மேலுளள கீற்றைக் கண்டு இரங்குகிறான், சுகமாய் வைத்திருப்பான் என்று நான் நினைத்தேன். அவனும் மற்றொருவனிடம் அக்கீற்றைக் காட்டி 'இதென்ன பார்த்துச் சொல்லும்' என்று கேட்டான். மற்றவன் நான் பட்ட கஷ்டங்களைப்பற்றி ஒன்றுஞ் சொல்லாமல் வேறு ஏதேதோ சொன்னான். அவன் அதைக் கேட்டு 'சரிதான்' என்று சொல்லி என்னை யெறிந்துவிட்டான். ஐயா! இப்பொழுது கடைசியில் உன் கையில் அகப்பட்டேன்" என்று சொல்லிற்று.

## 3. குருடர்கள்

நாம் குருடரை அடிக்கடி பார்க்கிறோம். சில குருடர் பிறர் கையைப் பிடித்துக்கொண்டும், சிலர் கோலினுதவியைக்கொண்டும் நடந்துபோவார்கள். குருடனுக்குக் கோல் கண்போலுதவுகிறது. தனவானொருவன் குருடனாயிருந்தால் அவனுக்காக பரிதாபப்பட்டு உதவி செய்வார் பலர் இருக்கலாம். ஏழையொருவன் குருடனாயிருந்தால் அவனுக்காக அனுதாபப்படுவோர் சிலரே.

குருடரில் இருவகை உண்டு. வயோதிகத்திற் பார்வை கெட்டவர் ஒரு வகையார். பிறவிக்குருடர் மற்றொரு வகையார். பிறவிக்குருடரோ சூரிய சந்திர வெளிச்சமும், புஷ்பங்களின் அலங்காரமும், அருமையான தாயின்

முகமும், மற்றவைகளும் இவ்விதமிருக்குமென்று ஒரு போதும் அறியமாட்டார்கள். குருடனொருவனை 'உனக்குக் கண் வேண்டுமா' என்று கேட்டால் 'ஆம் வேண்டும்' என்றுதான் அதிக வாஞ்சையோடு சொல்லுவான்.

அநேக வருஷங்களுக்குமுன் ஓர் அந்தகன் வழியோரத்திலிருந்து யாசகங் கேட்டுக்கொண்டிருந்தான். சற்குருவாகிய இயேசுகிறிஸ்து அவ்வழியாய்ப் போனார். அவர் முகமலர்ந்து சொல்லும் நன்மொழிகளைக் கேட்பதற்காக அநேகர் அவரோடேகூடப் போனார்கள். அப்பொழுது அவ்வந்தகன், சற்குருவைப் பார்க்கமுடியாதிருந்தாலும், அவருடைய வல்லமையையும் இரக்கமான குணத்தையும் கேள்விப்பட்டு உரத்த சத்தமாய் அவரை நோக்கி 'ஆண்டவரே! எனக்கு இரங்கும், இரங்கும்' என்று கூப்பிட்டான். சற்குருவின் பக்கத்தில் நின்றவர்கள் கோபங்கொண்டு அந்தக் கபோதியைப் பார்த்து 'கத்தாதே, மௌனமாயிரு' என்று அதட்டினார்கள். இயேசுகிறிஸ்துநாதர் அவன்மேல் மனதுருகி, அவனைத் தம்மிடத்தில் வரும்படி யழைத்தார். அவன் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு அவருக்கு முன்பாக வந்து நின்றபோது அவர், 'நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாய்' என்றார். அவன் பணமாவது, உணவாவது கிஞ்சித்தேனும் கேட்டிருப்பானா? சற்குருவின் பேரருளை யறிந்து தன் நேத்திரத்திற்கு ஒளி கொடுக்கவேண்டுமென்ற ஒரே யொரு ஈவைக் கேட்டான். பரம குருவாகிய அவர் அவ்வரங் கொடுக்கக்கூடுமா? ஆம், அவர் சர்வவல்லமையுடையவராகையாற் கொடுக்கக் கூடும். அவர் அவனுடைய வாஞ்சையை அறிந்து அந்த உத்தம ஈவை யருளினார். அப்போது அவனுக்குச் சொல்லமுடியாத அகமகிழ்ச்சி உண்டாயிற்று. குருடராய்ப் பிறப்பது முந்தின பிறப்பிலுண்டான பாவத்திற்குக் கடவுள் கொடுத்த தண்டனையென்று சிலர் நினைக்

கிறார்கள். பலவீனம் முதலான காரணங்களினால் உண்டாகிறதேயொழிய முந்தின பாவத்தினால் ஒருவன்



குருடனாகிறான் அல்லது பிறக்கிறான் என்று எண்ணுவது தப்பிதம். ஆகையாற் குருடரை இகழ்ச்சி செய்யாமல் அவர்களுக்கு வேண்டிய நன்மைசெய்வது நமது கடமையேயாம்.

சிலர் குருடரைப் படிப்பிக்கும்பொருட்டு பாடசாலைகள் ஸ்தாபித்திருக்கிறார்கள். அப்பாடசாலைகளிற் குருடர்க்கென்று விசேஷித்தவிதமாய்ப் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்களுண்டு. அவைகள் தடித்த காகிதங்களில் எழுத்துக்களைப் பின்பக்கம் வைத்து அழுத்திப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவ்வெழுத்துக்கள் முன்பக்கத்திற் கிளம்பியிருக்கும். குருடர் அதைக் கைவிரல்களினால் தடவி வரிகளையும் புள்ளிகளையும் அறிந்து இன்ன எழுத்தென்று உணர்ந்துகொள்வார்கள்.

வாசகம் கணிதம் முதலான புத்தகங்கள் மாத்திரமல்ல, வேதாகமம் ஞானப்பாட்டு முதலானவைகளும் அவர்களுக்கென்று பதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அவர்கள் வாசித்துத் தேவனை அறியும் அறிவில் தேர்ச்சியடைகிறதும் அல்லாமல் சங்கீதத்திலும் வல்லவர்களாயிருக்கிறார்கள். இவ்விதமாய் அந்தகாரத்திலிருக்கிறவர்கள் சந்தோஷம் அடைவதற்குப் பல வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் இவர்களுக்கென்று கைத்தொழிற் பாடசாலைகளும் ஸ்தாபித்திருக்கிறார்கள். அங்கே குருடர்களை விசித்திரமான நாற்காலி, பெட்டி முதலியவைகள் செய்யப் பழக்குகிறார்கள். குருடர் தெருவுக்குத் தெரு பிச்சை கேட்டுக் கஷ்டப்பட்டுத் திரிவதிலும் இப்படிப்பட்ட தொழில் முயற்சியிலிருப்பது எவ்வளவு நலமாயிருக்கும்.

## 4. சென்னையிலிருந்து எழுதின ஒரு கடிதம்
### (முதலாம் பாகம்)

எனது அன்பும் அருமையுமுள்ள தம்பிக்கு எழுதுவது,

கடவுள் திருவருளினாலே இங்கு நான் க்ஷேமமாயிருக்கிறேன். அங்கே நீயும், பிதா மாதாவுஞ் சகோதரர்களும் க்ஷேமமாயிருப்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் சென்ற புதன்கிழமை காலையில் எழும்பூர் வந்து சேர்ந்தேன். அங்கே புகைவண்டி வந்து தங்குமிடத்தில் நமது அன்புள்ள தமையனார் வந்திருந்தார். அவர் என்னைக்கண்டு அதிக சந்தோஷப்பட்டு, அழைத்துச் சென்றார். பின்பு நாங்கள் ஒரு குதிரைவண்டியிலேறி வீட்டுக்குப் போனோம்.

வழியில் ஒவ்வொரு வீதியிலும் திரளான ஜனங்கள் போவதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டு தமையனாரைப் பார்த்து, 'அண்ணா! இந்த ஊரிலே தேர்த் திருவிழாவா? அல்லது வேறு பெரிய உற்சவமா?' என்று

கேட்டேன். தமையனார் சிரித்து, 'தம்பி! நம்முடைய காட்டுப்பக்கங்களில் ஜனங்கள் அதிகமில்லை. இந்தப்



பட்டணத்திலோ பல தேசங்களிலிருந்து பற்பல காரியங்களுக்காக அநேகர் வருவார்கள். தினந்தோறும் இப்படியே ஜனங்கள் போய்க்கொண்டிருப்பார்கள்' என்றார். பின்பு நாங்கள் வீடுபோய்ச் சேர்ந்தோம்.

தாகமாயிருந்ததினால் கொஞ்சம் ஜலந்தரும்படி கேட்டேன். தமையனார் இருப்புக் குழாயிலுள்ள சாவியொன்றைத் திருப்பினார். உடனே ஜலம் மடமடவென்று வந்தது. நான் மிகவும் ஆச்சரியப்பட்டுத் தண்ணீர் குடித்தேன்; 'இந்தத் தண்ணீர் எங்கேயிருந்து வருகிறது' என்று கேட்டேன். அதற்கு அவர் 'தம்பி! பன்னிரண்டு மைல் தூரத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரி ஜலத்தை வாய்க்கால் வழியாய் விடுகிறார்கள். அந்த நீர் ஒரு பெரிய தொட்டியில் வந்து விழுந்து, அதி

விருந்து நிலத்திற் புதைக்கப்பட்ட இருப்புக்குழாய் வழியாய் ஓடிப் பற்பல இடங்களுக்கும் போகின்றது. அப்படியே அது இங்கும் வருகிறது' என்றார்.



கரடி

அடுத்த நாள் விநோதக் காட்சி சாலையைப் பார்க்கப்போனோம். அங்கே பற்பல மிருகங்கள், பறவைகள், ஊரும் ஜெந்துக்களிருந்தன. ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! பஞ்சவர்ணக் கிளி பார்த்தோம். வாலில்லாக் குரங்கு இரண்டிருந்தன. அவைகள் மனிதரைப் போலக் காணப்பட்டன. ஒட்டகம் ஒன்று கண்டோம். மற்ற ஒட்டகங்களுக்கு முதுகில் ஒரு முசுப்புத்தானிருக்கும். அந்த ஒட்டகத்திற்குஇரண்டுமுசுப்புக்களிருக்கின்றன. நாங்கள் நான்கு கரடிகளை ஒரு இருப்புக் கூட்டினுட் பார்த்தோம். அவைகள் எங்களைக் கண்டு வாயைத் திறந்து பயங்கரமான சத்தமிட்டன. பின்பு வேங்கையையும், சிறுத்தையையும், கழுதைப்புலியையும் பார்த்தோம்.



வேங்கை



சிறுத்தை

## சென்னையிலிருந்து எழுதின ஒரு கடிதம்
### (இரண்டாம் பாகம்)

அருமைச் சகோதரனே! நான் இன்னுஞ் சில விசேஷங்களைச் சுருக்கமாய் எழுதுகிறேன். நன்றாய் வாசித்து அறிந்துகொள். தண்ணீருக்குள் வசிக்கிற ஒரு விலங்கையும் பார்த்தோம். அதற்கு 'நீர் யானை' என்று பெயர். அது நிலத்திலிருக்கிற யானையைப்போல அவ்வளவு பெரிதன்று. அது குள்ள வடிவமுடையது. அதனை ஒரு பெரிய கிடங்கில் விட்டிருக்கிறார்கள். புல் முதலான தீனிகளைத் தின்னும்போது மாத்திரம் அது வெளியே வருகின்றது. மற்றச் சமயங்களில் அது நீரினுள்ளே கிடக்கின்றது. அதன் வாய் மிகவும் பெரியது. அதைப் பார்க்கப் பார்க்க வினோதமாயிருக்கிறது.



நீர் யானை

இந்த வினோதச் சாலையை விட்டு எழும்பூர் என்னுமிடத்திலுள்ள பொருட்காட்சிச் சாலைக்குப்

போனோம். அங்கே சென்று பார்த்தபோது, கற்களில் எத்தனையோ வகைக் கற்கள் இருந்தன. தானியங்களில் எத்தனையோ வகைகள் இருந்தன.

செத்த பறவைகள், செத்த மிருகங்கள் இவைகளின் உடல்களை மருந்திட்டு உலர வைத்துப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவைகளுள் பெரிய யானையைக் கூட விழுங்கத்தக்க ஒரு மீனின் உடலைப் பார்த்தோம். அம்மீனுக்குத் திமிங்கிலம் என்று பெயர். அவ்வளவு பெரிய மீனும் கடலிலிருக்குமா? அது எத்தனையோ அடி நீளமிருந்தது!



பொருட்காட்சிச் சாலை

மனுஷனை முழுமையும் விழுங்கும் முதலையையும் பார்த்தோம். குண்டுபோட்டுச் சுட்டாலும் அக்குண்டுகள் முதலையின் முதுகில் ஏறுதாம். ஆனால் வயிற்றின் கீழ்ப் பக்கம் மெல்லிய சதையுள்ளது. அந்த மீனும் முதலையும் செத்தவைகளாயிருந்ததினால் எங்களைப் பிடித்துத் தின்னவில்லை. அந்தக் காட்சிச்சாலையை விட்டுத் திரும்பிவர எனக்கு மனமில்லை.

நான் இன்னுமோர் நூதனங் கண்டேன். நமது இராஜாவுடைய சிலை யொன்று வீதி நடுவிலே நிறுத்தப் பட்டிருக்கிறது. அது பார்வைக்கு அலங்காரமும் அவ

ரது சொரூபத்தை உள்ளபடி காட்டுகிறதுமாய் இருந்தது. நேற்றுச் சாயங்காலம் கடற்கரைக்குப் போனோம். அநேகர் அங்கேயுள்ள காட்சிகளைப் பார்க்கவும், கடற்காற்றிலே உலாத்தவும் வந்தார்கள். திரைகள் கிளம்பி,



மோதி இரைவதும் கப்பல்கள் போவதும் அதிக குதூகலத்தை விளைத்தன. நீயும் இங்கே படிக்க வந்தால் நல்லது. தகப்பனாருடைய சம்மதத்துடன் வா. இக்கடிதத்திற்குப் பதில் எழுது. சுபம்.

இங்ஙனம்,

உனதன்புள்ள

அண்ணன்.

## 5. கையெழுத்து

கையினுல் எழுதும் எழுத்திற்குக் கையெழுத்தென்று பெயர். இக்காலத்திலுள்ளவர்கள் வெள்ளைக் காகிதத்தில் எழுதுகிறுர்கள். முற்காலத்திலுள்ளவர்கள் பனையோலையில் இரும்பினுற் செய்த எழுத்தாணிகொண்டு எழுதினுர்கள். அக்காலத்திலே காகிதம், பேனுவென்னும் எழுதுகோல், மை, அச்சியந்திரம் என்பவைகள் அபூர்வமாயிருந்தன. ஆதலாற் காகிதப் புத்தகங்கள் முற்காலத்திற் கிடைப்பதரிது. மாணுக்கர்கள் தாங்கள் படிக்கும் பாடங்களை ஒவ்வொருநாளும் பனையோலையில் எழுதுவார்கள். இப்போது மாணுக்கர் கஷ்டமில்லாமல் அச்சிட்ட புத்தகங்களை வாங்கி, பாடங்களைச் சுகமாய்ப் படிக்கிறுர்கள்.

பிள்ளைகள் இளமையிலேயே எழுதப் பழகவேண்டும். அடிக்கடி எழுதுவதினுல்தான் கையெழுத்துத் திருந்தும். சிலர் கையெழுத்து அச்செழுத்துப்போ லிருக்கிறது. அப்படியிருப்பதற்குக் காரணம் அவர்கள் சிறுவயது தொடங்கி நன்ருய் எழுதி வருவதேயாம். அநேக பிள்ளைகள் கையெழுத்து நன்ருய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறதேயில்லை. எவ்வளவு படித்தாலும் ஒருவனுக்குக் கையெழுத்து நன்ருய் இராவிட்டால் இவன் இராசாங்க உத்தியோகங்களில் பிரவேசிப்பது அரிது. ஒவ்வொரு பிள்ளையும் நன்ருய் எழுதப் பழகுதல் அதிக அவசியமாம். 'முதற் கோணல் முற்றும் கோணல்' என்ற பழமொழிப்படி எழுதத் தொடங்கும்போதே கோணுமல் எழுதவேண்டும்.

எழுத்துக்களாவது, வரிகளாவது சிறிதும் வளையாமல் எழுதவேண்டும். முதலில் பெரிய எழுத்துக்களாய் எழுதப் பழகி, அதன்பின்பு படிப்படியாய்ச் சிறிய எழுத்துக்களாய் எழுதவேண்டும். சிறிய எழுத்துக்களாய் முதலில்

எழுதத் தொடங்கினல் எழுத்துத் திருத்தமாய் வராது. முதன் முதல் எழுதத் தொடங்கும்போது அச்சு எழுத்துப்போல் நேராய் எழுதுவது நலம். சிலர் வாசிக்க முடியாதபடி சங்கிலி எழுத்து என்றும், கொலுசு எழுத்து என்றும், கோவையான எழுத்து என்றும் எழுதுகிருர்கள். அப்படி எழுதுவது நன்றன்று. பிள்ளைகளாவது பெரியோராவது யாவரும் வாசிக்கத்தக்கதாய்த் தெளிவாக எழுதுவது நல்லது. எழுதப் பழகும்போது ஆத்திரப்படாமல் எழுத்துக்களின் வடிவைக் கவனித்து எழுதவேண்டும். எழுத்துக்களின் ரேகைகள் எவ்வெவ்விடங்களில் மெல்லியனவாகவும் கனமாகவும் இருக்கின்றனவோ அப்படியே அவ்வவ்விடங்களில் எழுத வேண்டும். வாக்கியங்களின் முடிவுகளிலும், தொடர்ச்சிகளிலும், விணுவிடங்களிலும், வியப்புப்பொருள் தருமிடங்களிலும், பிரித்துக்காட்டு மிடங்களிலும் எந்தெந்தக் குறிகள் இடவேண்டுமோ அந்தந்தக் குறிகளை யிடவேண்டும். அப்படி எழுதினுற் கையெழுத்து நன்ருய் வரும்; யாவரும் சந்தோஷப்படுவார்கள்.

'கொம்புசுழி கோணுமற் கொண்டபந்தி மாருமல்
அம்புபோற் கால்கள் அசையாமல்—தம்பீ
எழுதினுற் சோறுண்டாம் இல்லையே யானுல்
பழுதுண்டு உன்பணிக்கே பார்!'

## 6. பறக்கும் மீன் (முதலாம் பாகம்)

மீன் நீர்வாழும் ஜெந்துக்களில் ஒன்று. அது சமுத்திரங்களிலும், ஆறு, கால்வாய் முதலிய நீரோட்டங்களிலும், ஏரி, குளம் முதலான நீர்நிலைகளிலும் வசிக்கும். சில மீன்கள் கோடைகாலத்தில் தண்ணீர் வற்றிப்போனுல் ஈரமுள்ள மணலிற் புதைந்திருக்கும். தண்ணீரில்லாத இடங்களில் மீன்கள் வசிக்கமாட்டா. தண்ணீரிலிருந்து



மீனைப் பிடித்துத் தரையிற் போட்டால் க்ஷண நேரத்தில் மயங்கிச் செத்துப்போம்.

மீன்கள் தங்கள் சிறு சிறகுகளி னுதவியினுல் தண்ணீரில் நீந்துகின்றன. மீன்வகையிற் பறக்கிற மீனும் ஒன்று. அதைப் பார்த்திருக்கிறீர்களா? பார்க்கவில்லையென்று நீங்கள் சொல்லுவீர்கள். அது சுமார் பன்னிரண்டு அல்லது பதினைந்து அங்குலம் நீளமுள்ளது. அதன் செலு பெரிதும் நீண்டதுமா யிருத்தலால் அம்மீன் நீந்துவதும் அல்லாமல் பறக்கவும்கூடும். அந்த மீன்கள் தனித்தனியா யிராமற் கூட்டங்கூட்டமா யிருக்கும். அவைகள் பெரிய மச்சத்தைக் கண்டால், அது தங்களைப் பிடித்துத் தின்னுமென்று, பயந்து நூற்றுக்கணக்காய் மேலே யெழுந்து பறந்துபோம். அப்படிப் பறந்து போனபோதிலும் அவைகளுக்கு ஆகாயத்திலுஞ் சத்துருக்களுண்டு. அங்கே அவைகளை இருஞ்சிப் பிடித்துத் தின்னுதற்குப் பறவைகள் வட்டமிட்டுக்கொண்டிருக்கும். அப்பொழுது அப்பறவைகளுக்குப் பயந்து, மீன்கள் மறுபடியுங் கீழே இறங்கும். இதுவுந் தவிரச் சில மீன்கள் தங்கள் சிறகுகள் காற்றிலே உலர்ந்துபோவதினுற் பறக்க முடியாமற் கீழே விழுவதுமுண்டு. சில வேளை அவைகள் கப்பல்

மேலும் விழுந்து சாகின்றன. அம்மீன்கள் இப்படியே நாள்முழுவதும் மேலே பறப்பதும் கீழே இறங்குவதுமா யிருக்கும்.

## பறக்கும் மீன் (இரண்டாம் பாகம்)

இவ்விதமாய் நீரிலும் ஆகாயத்திலுமுள்ள சத்துருக்களுக்குத் தப்பித்துக்கொள்வதற்காக அம்மீன்கள் படுங் கஷ்டத்தையறிந்த முன்னோர்கள் ஒரு கதை சொல்லுவார்கள்.



அது வருமாறு:—ஆதியில் அந்த மீன்களுக்கும் மற்ற மீன்களைப்போலவே செலு இருந்தது. ஆயினும் அவைகளுக்கு மற்ற மீன்களைப்போல இடைவிடாமல் நீரில் வசிப்பது திருப்திகரமாயிராததினால், அவைகள் முறுமுறுத்துக் கடவுளை நோக்கித் தங்களுக்குப் பறக்கும்படி சிறகு கொடுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டன. அதைக் கேட்டுக் கடவுள் அவைகளுக்குப் பறக்கக்கூடிய சிறகைக் கொடுத்தார். கொடுத்தவுடனே அவைகள் தற்பெருமைகொண்டு, நீரிலிருக்கும் மற்ற மச்சங்களை யிகழ்ச்சிசெய்தன. பின்பு அவைகள் ஆகாயத்திற் பறந்து

போயின. பறந்தபோதோ ஆகாயத்திற் பறக்கிற பட்சிகளைக் கண்டு பயந்து, தங்களுக்குச் சிறகிருப்பது மோசமே யொழியப் பிரயோஜனமொன்று மில்லையென்றறிந்து, சிறகுகளை யெடுத்துவிடும்படி கடவுளை நோக்கி மறுபடியும் விண்ணப்பஞ் செய்தன.

கடவுள் அம்மீன்களின் விருப்பத்திற்கு இசையாமல் 'உங்களாசைக்கும் தற்பெருமைக்கும் ஏற்ற தண்டனை இதுதான்' என்று சொன்னார். 'அதிக ஆசை, அதிக நஷ்டம்' என்பதை இக்கதையினால் அறிந்துகொள்ளலாம்.

## 7. மூன்று புத்திரரும் பதினேழு யானைகளும்

முன்னொரு காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள விஜயநகரத்தில் தனவந்த னொருவன் இருந்தான்.

அவன் அதிக விருத்தாப்பியமடைந்து, இறக்குந்தறுவாயில் இருக்கும்போது, தன்னுடைய மூன்று குமார



ரையும் வரவழைத்து, 'மைந்தரே! என்னுடைய ஆடு, மாடு, பணம், நிலம் முதலானவைகளை மூன்று சமபாகமாகப் பிரித்து ஆளுக்கோர் பாகம் எடுத்துக்கொள்ளுங்கள். இவற்றைத் தவிர என்னிடம் பதினேழு யானைகளும் இருக்கின்றன. அவைகளில் இரண்டிலொன்று மூத்த மகனும், மூன்றிலொன்று நடு மகனும், ஒன்பதி

லொன்று இளைய மகனுமாகப் பகுத்தெடுத்துக்கொள்ளுங்கள்' என்று கட்டாயப்படுத்திச் சொல்லிவிட்டு இறந்தான். பிள்ளைகள் மூவரும் அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளை வெகு சிறப்புடன், மரியாதையாய்ச் செய்தார்கள். அவன் பேரால் தரித்திரருக்குத் தான முதலானவைகளும் செய்தார்கள்.

பிற்பாடு தந்தையின் நிலம் முதலானவைகளை மூன்று சமபாகமாகப் பகுத்து ஆளுக்கோர் பாகம் பெற்றுக் கொண்டார்கள். கடைசியில் பதினேழு யானைகளைப் பாகம் பிரிக்கத் தொடங்கினபோது, அவர்களுக்கு மலைப்பு உண்டானது. அப்போது அந்த ஊரிலுள்ளவர்களை அழைத்து யோசனை கேட்டார்கள். அவர்களாலும் முடியாமற்போயிற்று.

பிற்பாடு அனுகுந்தி பென்னு மூரில் அதிவிவேகியான அப்பாஜி என்னும் பிரதானி இருக்கிறாரென்பது அவர்கள் ஞாபகத்திற்கு வந்தது. அவர்கள் அவரிடம் போய்த்



தங்கள் சங்கடத்தை யறிவித்தார்கள். அவர் 'உங்கள் தகப்பனாருடைய விருப்பத்தின்படி பதினேழு யானைகளையும் நாளைக்குப் பாகம் பிரித்துக்கொடுப்பேன்' என்று

சொல்லி அவர்களை அனுப்பினார். அடுத்தநாள் அப்பாஜி ஓர் யானைமீது ஏறி, அவர்கள் வீட்டிற்குவந்துபதினேழு யானைகளையும் ஒரே வரிசையில் நிறுத்தச் சொல்லி அதே வரிசையில் தமது யானையையும் நிறுத்தி, 'இப்போது உங்கள் தகப்பனார் சொல்லியபடி இவைகளைப் பிரித்துக் கொள்ளுங்கள்' என்றார். பிள்ளைகள் பங்கிடத்தொடங்கி எண்ணுகையிற் பதினேழு யானைகள் அல்ல, பதினெட்டு யானைகள் இருக்கின்றன வென்று சந்தோஷப்பட்டார்கள். அப்பதினெட்டு யானைகளில் மூத்தவன் தன் பாதிப் பங்காகிய ஒன்பது யானைகளையும், நடு மகன் தன் மூன்றில் ஒரு பங்காகிய ஆறு யானைகளையும், இளைய மகன் தன் ஒன்பதி லொருபங்காகிய இரண்டு யானைகளையும் எடுத்துக்கொண்டார்கள். இப்படி அம்மூவரும் பதினேழு யானைகளைமட்டும் பிரித்துக்கொள்ள மீதியாயிருந்த தமது யானையை நடத்திக்கொண்டு பிரதானி தம் வீடு போய்ச் சேர்ந்தார்.

## 8. ஒட்டகம்

ஒட்டகம் குதிரையைப் பார்க்கிலும் உயரமாயும் யானையைப்பார்க்கிலும் பருமன் குறைந்ததாயு மிருக்கிறது. அது மற்ற மிருகங்களைப்போலல்லாமல் அவலட்சணரூபமுடையது. அது உயரமாயிருப்பதால், மனுஷர் தன்மேல் ஏறும்போதும் பாரம் முதலானவைகளை ஏற்றும்போதும் தன் கால்களை மடக்கி முழங்காலை ஊன்றி நிற்கும். அது பின்னங்கால் நீட்டி எழுந்திருக்கும்போது அதன்மே லிருக்கிறவர்கள் ஜாக்கிரதையாயிராவிட்டால் விழுந்துபோவார்கள். வேலைக்காக வளர்க்கப்படும் ஒட்டகங்கள் இருவகைப்படும். ஒன்று பாரஞ்சுமக்கும், மற்றது சவாரிபோகும்.

ஒட்டகத்தின் குட்டியைப் பிறந்ததுமுதல், மூன்று வருஷமட்டும் ஒரு வேலைக்கும் விடமாட்டார்கள். நான்



காம் வருஷத்தில் அதை முழங்காலூன்றி நிற்கப் பழக்குவார்கள். பிற்பாடு அதை இருபது மணங்கு பாரஞ் சுமந்துகொண்டுபோகப் பழக்குவார்கள்.

பாரஞ் சுமக்கிற ஒட்டகம் நாள் ஒன்றுக்கு இருபத்தைந்து மைல் வீதம் மூன்று நாள் பயணம்போகும். சவாரிபோகிற ஒட்டகம் ஒரு மனுஷனையும் தண்ணீர்த் துருத்தியையும் சுமந்துகொண்டு, நாள் ஒன்றுக்கு ஐம்பது மைல்வீதம் ஐந்து நாள் பிரயாணம் செய்யும். இவ்வண்ணம் பாலைவனங்களில் தண்ணீர் குடியாமற் பிரயாணம்போகும். இது ஒட்டகத்திற்குக் கடவுள் கொடுத்த ஒரு விசேஷித்த இயற்கை அமைப்பு. ஒட்டகத்தின் வயிற்றிற்குள் சில தண்ணீர்ப்பைகள் இருக்கின்றன. அது பிரயாணத்திற்குப் போதுமான தண்ணீரை ஒரேமுறையிற் குடித்து, அந்தப் பைகளை நிரப்பி வைத்துக்கொள்ளும். வனாந்தரத்திற் பிரயாணிகளுக்குச் சில வேளை சகிக்க முடியாத தண்ணீர்த் தாகமுண்டாகில் அதைச் சாந்திபண்ணுவதற்கு வேறுவழி யில்லையென்று காணும்போது ஒட்டகத்தைக் கொன்று அதன் வயிற்றிற்குள்ளிருக்கும் பையிலுள்ள தண்ணீரைக் குடிப்பார்கள்.

ஒட்டகங்களுக்கு முசுப்பு இருக்கிறதைப் பார்க்கிறோம். அவைகள் பெரும்பாலும் ஒரு முசுப்புமாத்திரமுடையன. சிறுபான்மை இரு முசுப்புள்ள மற்றொரு ஜாதியும் உண்டு. இந்தத் திமில் கொழுத்திருந்தாற் பிரயாணம் செய்யும்போது, ஒட்டகத்திற்குக் களைப்பு உண்டாகாதபடி ஓர் போஷக ஆதாரமாயிருந்து, பலங் கொடுக்கும். மணற் பிரதேசங்களில் மாடு, குதிரை முதலானவை அதிக தூரம் பிரயாணஞ் செய்யமாட்டா. ஏனென்றால் அவைகளுடைய குளம்புகள் மணலிற் புதைந்து போவதினால் அவைகளுக்கு வருத்தமுண்டாகும். ஒட்டகத்தின் காலடி தட்டையாயும், விசாலமாயும் அமைந்திருப்பதால், அது யாதொரு பிரயாசமுமின்றி மணலிற் பிரயாணஞ் செய்யும். பாலைவனத்தில் மணல் அதிக சூடாயிருக்கும்; அங்கே வெயில் உஷ்ணத்தினால் கானல் பறக்கும். சுழல்காற்றும் அடிக்கும். அவ்விடங்களில் ஒட்டகத்தைத் தவிர மற்ற மிருகங்கள் அந்த உஷ்ணத்தைச் சகித்துப் பிரயாணஞ் செய்யமாட்டா. ஒட்டகத்துக்கோ தூசி, மணல் முதலானவை நுழையாதபடி, மூக்குத்துவாரத்தைத் தானே மூடவும் பின்பு தானே திறக்கவுங்கூடிய மற்றொரு சக்தியுமுண்டு.

ஒட்டகம் அதிக கூர்மையாய் மோப்பம் பிடிக்கக் கூடிய மிருகம். அதனாலும் வனாந்தரத்தில் அதிக பிரயோஜனம் உண்டு. தண்ணீர் கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருந்தாலும் ஒட்டகம் மோப்பம் பிடித்து அதற்கு நேராய்ச் செல்லும். பிரயாணத்தில் நூறு அல்லது இருநூறு ஒட்டகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நடந்து போகும்.

ஒட்டகம் முரட்டுத்தனமும், எஜமானிடத்து நன்றியில்லாத குணமும், பழிவாங்குங் குணமும் உள்ளது. எஜமான் அல்லது வேறொருவன் ஏதேனும் தீங்கு செய்தால், அது பழிவாங்க நினைக்குஞ் சுபாவமுடைய மிருக

மாகையால், அதன் கோபத்தைத் தணிப்பதற்காக அவர்கள் ஓர் உபாயம் செய்வார்கள். அதாவது தாங்கள் உடுத்தியிருக்கும் துணியோடு ஒளித்தொளித்துப் போய் அதன் சமீபத்தில் அந்தத் துணியை யெறிந்துவிடுவார்கள். அப்போது ஒட்டகம் அந்தத் துணியையே சத்துரு வென்றெண்ணிக் கிழித்தெறிந்துவிடும். அதன்பின் அதனுடைய உக்கிரகோபம் தணிந்துபோம்.

## 9. மழை

பட்டணங்களில் வாசம் செய்கிறவர்கள் மின்சார விளக்கு, விளக்குக்கூண்டு, நானுவிதமான பைசக்கிள் முதலான பல விநோதை காரியங்களைப் பார்க்கிறுர்கள். அப்படியே கிராமவாசிகள் கவனிக்கத்தக்க வேறு காரியங்கள் கிராமத்திலுண்டு.

கிராமங்களில் விளக்கு வெளிச்சத்தில் சில வேளைகளில் ஆயிரக்கணக்கான ஈசல்களுந் தும்பிகளும் வந்து விழுகிறதைப் பிள்ளைகள் பார்க்கிறுர்கள்.

சில வேளைகளிற் சிற்றெறும்புகள் வளையிலிருந்து திரள்திரளாய்ப் புறப்பட்டுத் தங்கள் வெண்ணிறமான முட்டைகளை வாயிற் கௌவிக்கொண்டு சுவர்களிலே ஆத்திரமாய் ஏறுவதையும் அநேகர் பார்த்திருக்கலாம் அல்லவா?

சில சமயங்களில் மேகத்திலிருந்து ஒளி அடிக்கடி தோன்றி மறைந்து போவதையும் பார்க்கிறேம். அந்த ஒளிக்கு மின்னல் என்று பெயர். ஈசல்களுந் தும்பிகளுங் கூட்டங் கூட்டமாய் வந்து விழும்போதும், எறும்புகள் திரள் திரளாய் முட்டைகளைக் கொண்டு போகும்போதும், மின்னல் பளிச்சுப் பளிச்சென்று தோன்றும்போதும், நாம் மழைபெய்யப்போகிறதென் றறிகிறேம். இனிக் கடவுள் கொடுத்த இயற்கையறிவால் எறும்பு ஈசல் முதலானவை முன்னமே மழை

பெய்யுமென்று அறிகின்றன. எறும்புகள் தங்கள் முட்டைகள் நனையுமென்றெண்ணி மழை வருவதற்கு முந்தி அவைகளை மேலே ஓரிடத்திற் கொண்டுபோய் வைக்கின்றன. இவைகளைக் கவனித்து வந்த முன்னோர்,

'ஈசல் புறப்பட மழை பெய்யும்' என்றும்,

'எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறினால் மழை பெய்யும்' என்றும்,

'மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை' என்றுஞ் சொல்லியிருக்கின்றனர்.

யானையானது தன் தும்பிக்கையினால் தண்ணீரை முகந்து குடித்துத் திரும்பவும் அந்த நீரை முதுகின் மேல் ஊற்றுகிற வண்ணமாக மேகமானது சமுத்திரங்களில் போய் ஏராளமான ஜலத்தைக் குடிக்கிறதென்றும், அந்த ஜலமே பூமிக்கு மழையாக மறுபடியும் வருகிறதென்றும் சில ஜனங்கள் சொல்வதுண்டு. அது அப்படியல்ல.

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டுச் சூடாக்கும் போது அதிலிருந்து எப்படி நீராவி கிளம்புமோ அப்படியே சூரியவெப்பத்தினால் சமுத்திரத்திலிருந்து நீராவியானது மேலே கிளம்பிப் போகிறது. அது ஆகாயத்திற் குளிரான மண்டலத்தில் சேரும்போது நாம் காண்கிற விதமான மேக ரூபமாய் மாறுகிறது. அம்மேகத்திற் குளிர்ந்தகாற்று வீசும்போது, அது மழையாகப் பெய்கிறது. அதிக குளிர்ந்த காற்று வீசினால் கல்மழையாகப் பெய்யும்.

திருநெல்வேலி முதலான சில இடங்களில் மழை சரியாய்ப் பெய்கிறதில்லை. அவ்விடங்கள் செழிப்பில்லாமல் வறண்ட பூமியாயிருக்கிறது. அங்குள்ளவர்கள் மழையில்லாமல் அதிக கஷ்டப்படுகிறார்கள்.

பாட்டங் தவறாமல் மழை பெய்கிற தஞ்சாவூர் முதலான இடங்களில் நிலம் அதிக செழிப்பாயிருக்கிறது. அங்கே நெல், வாழை, தென்னை, கரும்பு முதலியவைகளால் எவ்விடமும் பசுமை பொருந்திச் செழிப்புற்றிருப்பதை நாம் பார்க்கலாம்.

மழை குறைந்தால் ஆறு, ஏரி, குளம், கிணறு, கேணி என்பவைகளிலும் நீர் குறையும். ஆதலால், அவ்விடங்களில் விவசாயஞ் செய்வது மிகவும் கஷ்டம். அக்கஷ்டத்தை நிவிர்த்தியாக்கும்பொருட்டு இராசாங்கத்தார் வேண்டிய முயற்சிசெய்து, ஏரிகளையும், வாய்க்கால்களையும் வெட்டுவித்துத் தண்ணீர் வசதி பண்ணுகிறார்கள் அவர்கள் திருவாங்கூர்ப் பக்கத்திலுள்ள பெரியாற்றுத் தண்ணீரையுங் கால்வாய் வழியாக மதுரைப் பக்கத்திற்கும் பாயும்படி திருப்பியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த ஜில்லா நீர்வளம்பொருந்தி, எங்கும் பயிர் செய்யப்படுகின்றது. இதனால் எத்தனையோ பெயர்களுக்கு ஆகாரமும் வேலையு மகப்படுகின்றது.



எந்தப் பையனாவது கிணற்றில் தண்ணீர் மொண்டு குடிக்கும்போது அந்த நீர் எப்படி வந்ததென்று சிந்திப்பதுண்டா? மழையில்லா விட்டாற் கிணற்றில் தண்ணீர் ஏது?

ஊற்றிலிருந்து வந்ததென்று சொல்லுவீர்கள். ஊற்று எங்கிருந்து வந்தது? மழையானது தேவகிருபையால் உயர்ந்த இடங்களில் விழுந்து, அங்கிருந்து அருவிகளா

யும் ஆறுகளாயும் பாய்ந்து தாழ்ந்த பிரதேசங்களிற் செல்லுகின்றது. மேலும் மலை முதலான இடங்களிற் பெய்யும் மழை கீழே ஊறியூறிப் போகின்றது. அந்த நீரே குளங்கள் கிணறுகளில் ஊற்றுக்கண்களின் வழியாய் வருகின்றது.

மழையினுற் சில நஷ்டங்களும் சம்பவிக்கிறதென்று ஒருவன் சொன்னுல், அது மெய்தான் என்று நாம் ஒத்துக்கொள்ளுவோம். அந்த நஷ்டங்கள் பெரும்பாலும் மனுஷனுடைய அஜாக்கிரதையா லுண்டாகிறதல்லவா? சிலர் தங்கள் வீடுகளைப் பள்ளமான இடங்களிலும் ஆற்றோரங்களிலுங் கட்டுகிருர்கள். வெள்ளம் வரும்போது அவைகள் அழியாமலிருப்பதெப்படி? மடியில் நெருப்பை வைத்துக்கொண்டு சுடாதென்று நினைக்கலாமா?

மழையாலுண்டாகும் பயனைப்பற்றிச் சொல்லப் போனுல் எத்தனையோ உண்டு. இதுபற்றியே முதியோர் 'மாரி யல்லது காரியம் இல்லை' என்று உரைத்தனர். மழையில்லாவிட்டால் தண்ணீருமில்லை. தண்ணீரில்லாவிட்டால் நாம் ஜீவிப்பது கூடாத காரியம்.

தண்ணீர் எல்லாப் பிராணிகளுக்குந் தாகத்தைத் தீர்ப்பதோடு உணவையுங் கொடுக்கிறது. ஆடு, மாடு முதலான வீட்டு மிருகங்களும், சிங்கம், புலி, கரடி, முட்பன்றி முதலான காட்டு மிருகங்களும் தண்ணீரில்லாவிட்டால் ஜீவிக்கமாட்டா. அல்லாமலும் நமக்கு ஆகாரமாகும் தானியங்களும் நம்முடைய கண்களுக்கு அதிக அழகாய்த் தோன்றுகிற விருட்சங்களும் உண்டாகமாட்டா. புகைவண்டிகள், புகைக்கப்பல்கள் முதலான நீராவியந்திரங்களும் தண்ணீரில்லாவிட்டால் இயங்கா.

பிள்ளைகளே! இப்பிரயோஜனங்களைக் கவனிக்கும்போது மழைக்குக் காரணமாகிய கடவுளை நினையாமலிருக்கலாமா? மழை தூறுஞ் சமயத்தில் ஆகாயத்தில்



பல வர்ணங்கள் பொருந்திய அழகான வானவில்லைக் காணவில்லையா? இது கடவுளுடைய சிருஷ்டியின் அற்புதத்தை அறிவிக்கின்றது அல்லவா? இவ்வாறு மழையையருளும் கடவுளை அனுதினமும் நினைப்பது நம் கடமையாம்.

## 10. உபகாரத்துக்கு அபகாரம்

'எது எப்படிப்போனாலும் தன் காரியமே தனக்குப் பெரிது' என்று சிலர் நடக்கிறார்கள். இவர்கள் எப்போதும் அந்நியருடைய நன்மையை விரும்பாமல் தங்கள் சுயலாபத்தையே விரும்புவார்கள். இவர்களது குணத்திற்குத் திருஷ்டாந்தமாகப் பெரியோர் ஒரு கதை சொல்லுவார்கள்.

வனாந்தரத்திற் பிரயாணஞ்செய்கிற ஒருவன் இராத்திரி வேளையில் தான் தங்குமிடங்களில் ஒட்டகத்தை ஒரு பக்கம் கட்டிவிட்டு, வேறொரு பக்கத்தில் தன் கூடாரத்தை யடித்து, அதில் தூங்கி இளைப்பாறுவான். ஒரு நாள் இராத்திரி அவன் படுத்திருக்கும்போது, ஒட்டகங் கட்டியிருந்த கயிறு எப்படியோ அவிழ்ந்துபோயிற்று. அப்போது ஒட்டகம் தன் எஜமான் படுத்திருக்கும் கூடாரத்தண்டை வந்து, தன் முகத்தை உள்ளே நுழைத்து அவனை நோக்கி, 'கருணை நிறைந்த என் எஜமானே! உமக்குச் சர்வ சுகமு முண்டாவதாக! அடியேன் ஒரு விண்ணப்பம் செய்கிறேன். ஏழையின்பேரில் இரங்க

வேண்டும். வெளியே பனி அதிகமாயிருக்கிறபடியால், என் தலை நனைந்து ஜலதோஷம் கொள்ளும்போலிருக்கிறது. என் மூக்கைமாத்திரம் உள்ளே வைப்பதற்குக்



கொஞ்சம் இடங்கொடுத்தாற் போதும்' என்று வேண்டிக்கொண்டது. அந்த மனுஷன் ஒட்டகத்தின்மேற் பரிதாபங்கொண்டு 'அப்படித்தான் ஆகட்டும்' என்று உத்தரவு கொடுத்து மறுபடியும் படுத்துக்கொண்டான்.

அது சற்றுநேரம் பொறுத்து 'என்பேரிற் பரிதாபமுற்ற எஜமான் நித்திரையைக் கலைத்ததற்காக விசனப்படுகிறேன். என் தலையும் உள்ளேயிருந்தால் எனக்கோர் குறையுமில்லை' என்று சொன்னது. அப்போது அவன் 'இங்கே இடங் கொஞ்சமுமில்லை. நீ வருத்தப்படுகிறபடியால் தலையையும் உள்ளே வைத்துக்கொள்' என்று சொல்லி இரண்டாந்தரமும் தூங்கிவிட்டான்.

ஒட்டகம் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். எஜமானின் தயை யிருக்கிறபோதே என்

காரியம் பார்த்துக்கொள்வேன்' என்று நினைத்துத் தன் தலையை மாத்திரமல்ல கழுத்தையும் உள்ளே செலுத்தினது.

பிற்பாடு தன் எஜமானை மூன்றுந் தடவையும் விழிக்கச்செய்து 'தயாநிதியாகிய என் எஜமானுக்குச் சினம் வராதிருப்பதாக. அடியேனது இன்னோர் மன்றாட்டுண்டு. என் இரு முன்னங்கால்களும் உள்ளே யிருந்தால் மகா சவுக்கியம். இதற்கு உத்தரவு அருளவேண்டும்' என்று கெஞ்சினது.

அதைக்கேட்டு எஜமான், 'நீ கூடாரத்தில் ஒரு பக்கமாக உன் விருப்பத்தின்படி படுத்துக்கொள்' என்று சொன்னான். உடனே அது தன் எஜமானுக்கு வருந் தொந்தரவைக் கவனியாமல், தன் கால்களோடு தன் சரீரம் முழுவதையும் அதற்குள் நுழைக்கப் பிரயத்தனஞ் செய்தது. அப்போது ஒட்டகத்தின் முசுப்பானது



கூடாரத்தின் முகட்டிற் படவே, அது முளைகளோடு மேலே கிளம்பினதினால் துணி கிழிந்து கயிறுகள் அறுந்தன. எஜமான் தான் செய்த நன்றியின் பலன் இது தானா என்று தனக்குள் நொந்து, 'ஊசி நுழைய இடம் கொடுக்க, ஒட்டகம் நுழைந்ததே' என்ற முதுமொழி உண்மை யென்பதையும் உணர்ந்தான்.

இக்கதையை வாசிக்கிறவர்கள் ஒட்டகத்தின்மேற் குறைசொல்லுவார்கள். ஆயினும் ஒட்டகத்தைப்போலத் தன்னயமே கருதும் பிள்ளைகள் இப்பாடசாலையில் இல்லையா?

## 11. முத்து

முத்து ஒன்பதுவகை இரத்தினங்களில் ஒன்று. ஒன்பதுவகை எவை? வைரம், மரகதம், மாணிக்கம், புஷ்பராகம், வைடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவளம் என்பவைகளே. முத்துக்கள் கடலில் உண்டாகின்றன. அவை பெரும்பாலும் வெள்ளை நிறமுஞ் சிறுபான்மை வேறு நிறமுமுடையன. முத்துக்களில் வெண்முத்து, செங்நீர்முத்து, ஆணிமுத்து என மூன்றுவகை யிருக்கின்றன. வெண்முத்து சந்திரனைப்போல வெண்மை நிறமும், செங்நீர்முத்து சிவந்த நிறமும், ஆணிமுத்து வட்டவடிவும் உடையன.

அதிககாலம் செல்லச் செல்ல, முத்துக்கள் ஒளி குறைந்து மங்குகின்றன. அவ்விதம் ஒளி குறைந்து போவதை இரத்தின பரீட்சையில் வல்லவர்கள் எளிதில் அறிவார்கள். சிப்பியில் விளையும்போதே காற்றினாலும், மணலினாலும், நீரினாலும், கல்லினாலும் உண்டாகிற தோஷத்தினால் முத்துக்கள் ஒளி மங்குகிறதென்று சிலர் சொல்லுகிறார்கள்.

சில வருஷங்களுக்கு முன்னே ஒரு அரசி தன் கழுத்தில் ஒரு முத்துமாலை அணிந்திருந்தாள். அதிலுள்ள முத்துக்கள் பழையகாலத்து முத்துக்களாயிருந்ததினால் ஒளி குறைந்திருந்தன. அரசி அதனை அறிந்து, தன் மந்திரிமாரை அழைத்து முத்துக்களுக்குண்டான மங்கலை நீக்கிக்கொடுங்கள் என்று கட்டளையிட்டாள்.

மந்திரிமார் அம்முத்துக்களை வாங்கி, அவைகளுக்கு ஒளிகொடுக்கும் மார்க்கத்தை யோசித்தார்கள். கடலில்

உண்டான முத்துக்கள் அதை விட்டு வெகுகாலம் பிரிந்ததினுல் ஒருவேளை ஒளிக்குறைவு நேரிட்டிருக்கலாம் என்றும், மறுபடியும் கடல்நீரிற் சிலகாலமிருந்து ஊறுமானல் அந்த மங்கல் நீங்கி, முன்போல ஒளி அதிகப்படக் கூடுமென்றுந் தீர்மானித்தார்கள். பின்பு இருப்புக்கம்பிகளால் இணைத்துச் செய்த ஒரு கூண்டில் அம்முத்துக்களையெல்லாம் பலமாய்க் கட்டி அக்கூண்டைக் கடலிலமிழ்த்தித் தண்ணீரிற் கிடக்கும்படி வைத்தார்கள். அந்த இருப்புக் கூட்டினுள்ளே கடல் ஜலம் ஓடிக்கொண்டிருந்தது. அதில் நனைந்திருந்த முத்துக்கள் சிறிது காலத்திற்குப் பிற்பாடு முன்போலப் பிரகாசத்தை யடைந்தன.

முத்துக்கள் பல தேசத்தாராலும் அலங்காரத்திற்காக அணியப்படுகின்றன. பெண்கள் புலாக்கு, கொப்பு, கர்னப்பூ, மூக்குத்தி முதலான ஆபரணங்களில் அவைகளைப் பதித்துக்கொள்வதுமல்லாமல் மாலையாகவும் கோத்துக் கழுத்திலணிவார்கள். சிலர் மோதிரங்களிற் கட்டிக்கொள்ளுவார்கள். இராஜாக்கள் கிரீடங்களிற் பதிப்பார்கள்.

## 12. முத்துச் சிப்பி

பலவகையான சிப்பிகளிலும் முத்துச் சிப்பிகளே மேலானவைகள். இந்தச் சிப்பிக்குள் முத்துக்கள் விளைவதினுல் இதற்கு முத்துச் சிப்பியென்று பெயர் வந்தது. முத்துச் சிப்பிகள் இலங்கையிலே மன்னர், மறிச்சுக்கட்டி என்னும் ஊர்களையடுத்த கடல்களிலும், இந்தியாவிலே பாம்பன் கடலோரத்திலும், பெர்சியன் கடலிலும் அகப்படுகின்றன. சிப்பிகள் கடலில் ஆழமான இடத்தில் ஒன்ருேடொன்று நெருங்கிக் குவிந்து கிடக்கும். அவைகள் கிடக்குமிடத்தின் ஆழம் சுமார் ஐம்பதடியிருக்கும்.

சிப்பியின் மேலும் கீழும் வட்டமாய்க் கல்லைப்போலக் கனமான இரண்டு மூடிகளிருக்கின்றன. அந்த மூடிகளின் நடுவில் மெல்லிய சதையுண்டு. அந்தச் சதையிலேதான் சிப்பிகளுக்கு வாயும் வயிறுமிருக்கும். அந்தச் சதையின் அடிப்பக்கத்தில் முத்துக்கள் உண்டாகின்றன. முத்துக்கள் மழைத்துளியினால் உண்டாகின்றனவென்று முன்னோர்கள் நினைத்திருந்தார்கள். எப்படியென்றால், முத்துச் சிப்பிகள் மழை பெய்யுமளவும் தங்கள் மூடியைத் திறந்துகொண்டு சமுத்திர நீர்மேலே மிதந்து திரியும். ஆடிமாதம் சோதிநட்சத்திரத்திற் சிறுமழைபெய்யும்போது அம்மழைத்துளி சிப்பிகளின் வயிற்றில் விழ உடனே அவைகள் மூடிக்கொண்டு நீரின் கீழிறங்கும். அந்தத் துளியே சிப்பியின் வயிற்றிலிருந்து விளைந்து முத்தாகும் என்பதே. இது உண்மையல்ல. சிப்பிகள் எப்பொழுதுங் கீழே யிருப்பதன்றி மேலே வரமாட்டா. முத்துக்களுண்டாகும் விதத்தை உண்மையாகக் கண்டறிந்த விவேகசாஸ்திரிகள் வெளிப்படுத்தியிருப்பதைச் சிறிது காட்டுவோம்.



சிப்பி கடலின்கீழ் நிலத்தில் அடுக்கடுக்கா யிருக்கும். அங்கே மச்சங்களாவது, பெரிய நண்டுகளாவது வந்து மணலையும் சேற்றையும் கலக்கும். அதனால் சிறிய தூசிகளும் மிகவும் நுண்ணிய கற்களும் எழும்பிச் சிப்பிகளின் மேலே படுகின்றன. அப்பொழுது சேற்றிலுள்ள மிக நுட்பமான சிறு பூச்சிகளைத் தின்னுதற்குச் சிப்பிகள் தங்கள் மூடியைச் சிறிது திறக்கவே, தண்ணீரும் மணற்பொடியும் நுண்மையான கற்களும், அவைகளின் வயிற்றினுட் சேரும். அச்சமயத்தில் கூர்மையான சிறு கற்கள் சதைக்கும் கீழ் மூடிக்கும் நடுவே பிரவேசித்தால், சிப்பிக்கு நோவுண்டாகும். அவயவமில்

லாமையால் சிப்பிகள் அந்தக் கற்களை வெளியே தள்ள மாட்டா.

சிப்பிக்குட் சென்ற அந்தக் கல் சதையிற் படும் போது, அதற்கு ஒருவித எரிச்சலுண்டாகிறது. அவ் வெரிச்சலை ஆற்றும்படி சிப்பிகள் ஒருவிதப் பால் போன்ற நீரைச் சுரந்து அக்கல்லின்மேல் பாவச்செய்த லால் அந்தக் கல்லே முத்தாகின்றது. அந்த நீர் எல்லாப் பக்கத்தும் சமமாகவும் அதிகமாகவும் செறிந்து, கறைக ளில்லாமலிருந்தால், அது நல்ல முத்தாகும். அவ்வா றின்றி ஒரு பக்கம் அதிகமாகவும், ஒரு பக்கங் குறை வாகவும் பட்டிருந்தால் அது நல்ல முத்தாகாது. பெரிய முத்தானது பட்டாணிக் கடலையைப்பார்க்கிலும் கொஞ் சம் பெரிது. கடுகுபோலிருக்கும் முத்துக்கள் விதை முத்துக்கள் என்று சொல்லப்படும்.

## 13. முத்துக் குளிப்பு

கடலின் கீழிருக்கும் முத்துச் சிப்பிகளை நீரில் மூழ்கி எடுத்து மேலே கொண்டுவருவதற்கு முத்துக்குளிப்பு என்று பெயர். இது இலங்கையில் விசேஷமாய் நடக் கின்றது.

சிப்பிகள் வருஷத்தில் நாலைந்து வாரம் மாத்திரம் எடுக்கத்தக்கவைகளாய் இருக்கின்றன. ஆகையால் அவைகள் முதிர்ந்தவுடன் முத்துக் குளிப்பு நாலைந்து வாரம் நடக்கும். சில வருஷங்களில் சிப்பி விளையாமை யினால் முத்துக் குளிப்பும் நடப்பதில்லை. முத்துக் குளிப்பு நடக்கும் காலத்தில் பற்பல ஊர்களிலிருந்து முத்துக் குளிக்கிறவர்களும், வியாபாரிகளும், அதிகாரிகளும் வரு வார்கள். எடுத்த சிப்பிகளைச் சேர்ப்பதற்கும், வியாபாரி களுங் கூலிக்காரரும் உத்தியோகஸ்தருந் தங்குவதற்கும், சாமான்கள் விற்பதற்கும், அநேக சிறு குடிசைகள் கட்டப்பட்டிருக்கும். பல விடங்களிலுமிருந்து ஜனங்

கள் வருவதினாலும், சிப்பிகளின் நாற்றத்தினாலும், சுத்தமான ஆகாயமில்லாததினாலும், முத்துக் குளிப்பு நடக்கும் காலத்தில் வாந்திபேதி உண்டாகும். அதனால்



குளிப்பு முடிந்தவுடன் அந்தக் குடிசைகளையெல்லாம் எரித்துவிடுவார்கள்.

முத்துக் குளிக்கிறவர்கள் படவுகளில் ஏறி முத்துச் சிப்பிகளிருக்கும் இடத்திற்குப் போவார்கள். அவர்கள் தண்ணீரிலிறங்கிக் குளியோடிச் சிப்பி எடுக்கிறவர்கள்

பத்துப்பேரும், அவர்களைக் கீழே இறக்கியும், மேலே ஏற்றியும் நிற்பவர்கள் பதின்மூன்று பேரும் ஆக இருபத்து மூன்றுபேர். ஜலத்தில் இறங்கிக் குளியோடுகிற பத்துப்பேரும் ஐந்தைந்து பேராக மாறிமாறி இறங்குவார்கள். இறங்கும்போது ஒரு மணங்கு பாரமுள்ள கற்கள் கட்டப்பட்ட வடத்தின் கண்ணியிற் காலை மாட்டிக்கொண்டு ஒரு வலைக்கூடையுடன் அதிசீக்கிரமாய் இறங்குவார்கள்.

அவர்கள் ஜலத்தில் மூச்சடக்கி இரண்டு மூன்று நிமிஷம்வரை நின்று அதற்குள்ளாக முத்துச் சிப்பிகளைக் கூடை நிறைய வாரிக் கொட்டி வடத்தை அசைப்பார்கள். அப்போது வடம் பிடித்திருப்போர் நீரில் நிற்பவர்களையுஞ் சிப்பிக்கூடையையும் மேலே இழுத்துப் படவிற் சேர்ப்பார்கள். ஒரு படவில் இருபதினுயிரம் அல்லது முப்பதினுயிரஞ் சிப்பிகள் சேர்ந்தபின் அவைகளைக் கரையிற் கொட்டிவிட்டு மறுபடியும் எடுக்கப் போவார்கள்.

காட்டிற் பயங்கரமான புலிகளிருப்பதுபோலக் கடலிலும் பெரிய சுறுமீன்களிருப்பதினுல் முத்துக் குளிக்கிறவர்கள் அவைகளுக்குப் பயப்படுவார்கள். அம்மீன்கள் சில வேளைகளில் வேகமாய் ஓடிவந்து சிலரைக் கௌவிப் பிடித்துப் பீறிக் கொன்று தின்றுவிடும். ஆனல் பெரும்பாலும் படவுகளிலிருப்பவர்கள் கூச்சலிடுவதினுலும் தண்ணீர் அசைந்து கலங்குவதினுலும் அந்த மீன்கள் பயந்து மிகுதியாய் வருகிறதில்லை.

சிப்பிகளை அநேகர் விலைக்கு வாங்கி அறுத்துக் கழுவி முத்தெடுப்பார்கள். விலையுயர்ந்த முத்துக்கள் அதிகம் இருக்கமாட்டா. கடுகைப்போலுள்ள விதை முத்துக்களே அதிகமா யகப்படும். குளித்தெடுத்த சிப்பிகளில் முத்துக் குளிக்கிறவர்கள் மூன்றில் ஒரு பங்கும், அதிகாரிகள் இரண்டு பங்கும் பாகித்துக்கொள்ளுவார்கள்.

## 14. மதியூகி மந்திரி (முதலாம் பாகம்)

ஒருதேசத்திலே மிக்க சம்பத்துள்ள ஒருவரிருந்தார். அவருக்குப் பன்னிரண்டு புத்திரர் பிறந்தார்கள். அவர்களுள் பதினேராவது மகனுக்கு யோசேப்பு என்று பெயர். யோசேப்பும் பன்னிரண்டாவது பிள்ளையும் உடன் பிறந்தவர்கள். மற்றவர்கள் வேறு தாய்மார்களின் புத்திரர். இவர்களுள் யோசேப்பு இளமையிலேயே தயை, ஞானம், நற்குணம் பொருந்தியவராய் வளர்ந்தார். இவர் தமது சகோதரரோடு தேச வழக்கப்படி ஆடுமாடு மேய்க்கப் போய்வருவார். தகப்பன் மற்றப் பிள்ளைகள் எல்லாரிலும் இவரை அதிகமாய் நேசித்தபடியால் இவருக்கு ஒரு பட்டுவர்ணச் சட்டை கொடுத்தார். இதைக்கண்டு மற்றச் சகோதரர் பொறாமைகொண்டு, அவரைப் பகைத்தார்கள்.

ஒருநாள் யோசேப்பு தமது சகோதரரைப் பார்த்து, 'என் அன்புள்ள சகோதரரே! நான் இராத்திரித் தூங்கும்போது ஒரு சொப்பனங் கண்டேன். அதன் பொருளைச் சொல்லவேண்டும். நாம் எல்லாரும் வயலிலே தானியத்தை அறுத்துப் பன்னிரண்டு கட்டுக்கள் கட்டினேம். அவைகளுள் என் கட்டு நிமிர்ந்து நிற்க, உங்கள் அரிக்கட்டுகள் அதைச் சுற்றி வணங்கி நின்றன' என்ருர். இதைக் கேட்டதும் முன்னிருந்த மனவெரிச்சலும் பொறாமையும் அதிகரிக்கச் 'சகோதரா! நீ எங்களை ஆண்டு அரசுபுரியப் போகிருயா? கனவின் பயனை இருந்தறிவோம்' என்று அவர்கள் சொன்னுர்கள்.

இவர் பின்னும் ஒரு சொப்பனங் கண்டு, அதைத் தந்தைக்குஞ் சகோதரருக்குஞ் சொல்லத் தொடங்கினுர். 'அன்புள்ள தந்தையே! அருமைச் சகோதரர்களே! சந்திர சூரியரும் பதினெரு நட்சத்திரங்களும் என்னை வந்து வணங்கின. இப்படிக் கனுக் கண்டேன்' என்ருர்.

தகப்பன் இவரைப் பார்த்து, 'என் மகனே! நான் உன்னைச் சாது சற்குணனென்று நினைத்தேன். இப்படி மனம் வருந்தச் சொல்லலாமா? நீ கண்ட கனவில், சூரியன் நான், சந்திரன் உன் தாய், பதினொரு நட்சத்திரங்கள் உன் சகோதரரைக் குறிக்கும். நாங்களெல்லாரும் உன்னை வணங்குவோமா?' என்று கண்டித்துப் பேசினார். சகோதரருக்கு இவர்மேல் இன்னும் பகை மூண்டது.

## மதியூகி மந்திரி (இரண்டாம் பாகம்)

இப்படியிருக்க இவருடைய சகோதரர்கள் ஆடு மேய்க்கப் போய்ச் சில நாட்களாய்த் திரும்பிவராததினால், தகப்பன் யோசேப்பை யழைத்து, 'நீ போய் உன் சகோதரர் சுகத்தைத் தெரிந்துவா' என்று அனுப்பினார். பிதாவின் சொற்படியே, இவர் வர்ணச்சட்டை இட்டுக் கட்டுச்சாதமுங்கொண்டு, சகோதரரிருக்குமிடந் தேடிப் போனார். சகோதரர் இடம்விட்டு இடம் மாறி, ஆடுகளை மேய்த்துக் கடைசியில் ஓர் வனாந்தர வெளியில் போயிருந்தார்கள். இவரோ, காடுமேடான எல்லா இடங்களிலும் அலைந்து சகோதரர் இருக்குமிடத்திற்கு வந்தார். சகோதரர், இவர் தூரத்தில் வருவதைப் பார்த்து, 'ஆ, ஆ! சொப்பனக்காரன் வருகிறான். இவனைக் கொன்று இங்குள்ள குழியிற் புதைத்துவிடுவோம். தகப்பனார் கேட்டால், துஷ்டமிருகங் கொன்று தின்றது என்று சொல்வோம், பின்பு இவன் சொப்பனம் எப்படி முடியும் பார்ப்போம்' என்றார்கள். அவர்களில் மூத்தவன் மனமிரங்கி, 'இவனைக் கொல்லக்கூடாது, கொலைபாதகம் நம்மைச் சுற்றிப் பிடிக்கும், இந்தக் காட்டிலுள்ள பாழ்ங்கிணற்றில் தள்ளிவிடுவோம்' என்றான்.

யோசேப்பு சமீபத்தில் வந்தவுடன் அவர்கள் இவரைப் பிடித்து அங்கியைக் கழற்றி, ஒரு பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டார்கள். இவர், 'என் சகோதரர் என் இப்

படிச் செய்தார்கள்? அன்னபானம் ஒன்றுமில்லாமல் இக் கிணற்றில் இறக்கும்படி நேர்ந்ததே' என்று பயந்தார்.



அப்போது சில வர்த்தகர்கள் ஒட்டகங்களில் சாமான் களை ஏற்றிக்கொண்டு தூரதேசத்துக்குப் பிரயாணமாய் அவ்வழியே வந்தார்கள். அதைக் கண்டு, சகோதாருள் ஒருவன், 'நமது யோசேப்பை இந்த வியாபாரிகளுக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள்' என்று சொல்ல, மூத்த வனைத் தவிர மற்றவர்களும் அதற்கிணங்கி, அக்காலத் தின் வழக்கப்படி இருபது வெள்ளிக்காசுக்கு இவரை விற்றார்கள். அவ்வியாபாரிகள் இவரையுங் கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள். மூத்த சகோதரனோ இது தெரியாமற் கிணற்றண்டை வந்து பார்த்தபோது, தம்பி யைக் காணமல் நடந்த செய்தியைக் கேட்டுக் கதறி மற் றச் சகோதரரைக் கண்டித்தான்.

பிற்பாடு சகோதரர் எல்லாரும் ஓர் உபாயம் யோசித்து ஒரு வெள்ளாட்டுக் கிடாயைக் கொன்று, அதனிரத்தத்தில் தம்பியின் அங்கியைத் தோய்த்துத்

தந்தையிடம் போய்த் தம்பி தனிமையாய் வந்தவிடத்தில் அவனைக் காடியோ புலியோ காட்டிலே கொன்றுவிட்டது. 'நாங்கள் திரும்பி வந்தபோது வழியிலே இந்த அங்கியைக் கண்டெடுத்தோம்' என்ருர்கள். தகப்பன் அதைப் பார்த்து, மகனது அங்கி என்றறிந்து மிகுந்த துக்கத்தோடு புலம்பினன்.

## மதியூகி மந்திரி (மூன்றும் பாகம்)

பின்பு வர்த்தகர்கள் யோசேப்பை ஒரு பட்டணத்திற்குக் கொண்டுபோய் அங்கே ஓரிடத்தில் நின்று இவரை விலை கூறினர்கள். இந்த வாலிபர் வெட்கத்தோடும் அழுகையோடும் நிற்பதை அத்தேசத்து அதிபதி இவரை விலைக்கு வாங்கித் தன் அரமனைக்குக் கொண்டுபோனன். அங்கே அதிபதி இவர் விவேகத்தையுஞ் சற்குணத்தையும் நேர்மையையும் பார்த்து, 'இந்த அடிமை உண்மையுள்ளவன்' என்று நம்பித் தன் வீட்டு விசாரணைக்காரனக வைத்துத் தன் பொருள் பொக்கிஷமெல்லாம் இவர் கையில் ஒப்புவித்தான்.

இப்படியிருக்கையில் அதிபதியின் மனைவி ஒருசமயந் தன் புருஷனிடத்தில் இவர்மேற் பொய்யான குற்றஞ் சாட்ட அவன் இவரைச் சிறைச்சாலையிற் போட்டான். இவரது நேர்மையைக் கண்ட சிறைச்சாலைத் தலைவன் அங்குள்ள எல்லாரையும் இவர் கையில் ஒப்புவித்தான். அதில் ராஜாவின் வேலைக்காரரிலும் இருவர் சிறையிருந்தார்கள். எஜமானனுக்கு விரோதமாய்த் துரோகஞ் செய்ய நினைத்தார்களென்ற சமுசயத்தின்மேல் அவர்கள் அங்கே காவலில் வைக்கப்பட்டார்கள். அவர்களிலொருவன் சுயம்பாகி, மற்றவன் பானம் ஈவோன். ஒருநாள் இரவில் அவர்கள் கனக் கண்டு மனங்கலங்கிக் கவலை கொண்டார்கள். அதை யோசேப்பு பார்த்து 'நீங்கள் ஏன் விசாரமாயிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அப்போது

பானக்காரன் 'நானேர் சொப்பனங் கண்டேன். எனக்கு முன்பாக ஓர் திராட்சச்செடி யிருந்தது. அதில் மூன்று கொடிகளைப் பார்த்தேன். அவை பூத்துக் காய்த்துப் பழுத்திருந்தன. நான் அந்தப் பழங்களைப் பறித்துப் பிழிந்து ராஜாவுக்குக் கொடுத்தேன்' என்றான். அதற்கு யோசேப்பு கடவுள் அருளின அறிவின்படியே சொப்பனத்தின் அர்த்தத்தை யறிந்து சொன்னதாவது: நீ நல்ல பாக்கியசாலி. அந்த மூன்று கொடிகளும் மூன்று நாளாம். மூன்று நாளைக்குள்ளே உன் வேலை உனக்குத் திரும்பவும் கிடைக்கும்; இதுவே அர்த்தமாம்' என்றார். இதைக் கேட்டுத் தைரியங்கொண்டு சமையற்காரன் 'நான் கண்ட கனவைச் சொல்வேன், கேளும்! என் தலைமேல் மூன்று கூடைகளிருந்தன. மேற்கூடையிலே எஜமானுக்குச் செய்த சகலவித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சமிருந்தன. அவைகளைப் பறவைகள் வந்து பட்சித்துப் பறந்துவிட்டன' என்றான்.

அதற்கு யோசேப்பு, 'உன் காரியத்தை நினைத்து விசனப்படுகிறேன். நீ கண்ட மூன்று கூடைகளும் மூன்று நாளாம். மூன்று நாளைக்குள் ராஜா உன்னைச் சிரச்சேதம் பண்ணுவார்' என்றார்.

இப்படி யோசேப்பு சொன்ன அர்த்தத்தின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.

## மதியூகி மந்திரி (நான்காம் பாகம்)

இரண்டு வருஷம் சென்றபின்பு ஒருநாளிராத்திரி அரசன் ஒரு கனக் கண்டு, பயந்து விழித்தெழுந்து, மறுநாட் காலையில் எல்லாச் சாஸ்திரிகளையும் அழைப்பித்துத் தான் கண்ட சொப்பனத்திற்குப் பொருள் கூறும்படி கேட்டான். ஆனாலும் ஒருவராலும் சொல்லக்கூடாமற் போயிற்று. அப்போது பானக்காரனுக்குத் தன் சொப்பனத்தை வெளிப்படுத்தின வாலிபனைப்பற்றி ஞாபகம்

வந்து, ‘என் எஜமானே! நான் சிறைச்சாலையிலிருந்த போது, ஒரு கனுக் கண்டேன். அக்கனுவின் பயனை அங்கிருந்த ஒரு வாலிபன் சொன்னார். ஒருவேளை உம்முடைய சொப்பனத்தின் அர்த்தத்தையும் அவர் சொல்லுவாரே யொழிய, வேறே ஒருவராலும் முடியாது’ என்றான். உடனே ராஜா இவரை அழைப்பித்து, ‘நான் ஓர் சொப்பனங் கண்டேன். அதன் அர்த்தத்தை நீ சொல்லக்கூடுமென்று கேள்விப்பட்டேன். அதாவது நான் ஒரு நதியோரத்தில் நின்று உலாவும்போது, ஏழு அழகான பசுக்கள் நீரிலிருந்து வெளியே வந்தன. அதன்பின்னுல் வேறு ஏழு அவலட்சணமுடைய பசுக்கள் வந்து அவைகளைத் தின்றுவிட்டன. இதன் பொருள் என்ன?’ என்று கேட்டான்.



அப்பொழுது யோசேப்பு: ‘அழகான ஏழு பசுக்கள் ஏழு வருஷங்களாம். அந்த ஏழு வருஷங்களில் நல்ல வேளாண்மை உண்டாகும். பின்னுல் வந்த ஏழு பசுக்களும் ஏழு வருஷங்களைக் குறிக்கும். அவ்வேழு வருஷங்களிலும் கொடிய பஞ்சமுண்டாகும்; இதுதான் அர்த்த

மாம். ஆகையால் விளைவுள்ள காலத்தில் தானியங்களைக் களஞ்சியத்திற் கட்டிவைக்கவேண்டும். இக்காரியம் பார்க்க விவேகமுள்ள மந்திரியை நியமிக்கவேண்டும். அப்படிச் செய்தால் பஞ்சத்தின் கொடுமை தேசத்தைத் தாக்காது' என்றான்.

இதைக்கேட்டு ராஜா சற்றுநேரம் யோசித்து, 'உன்னிடம் சர்வஞானமும் இருக்கிறதென்று அறிந்துகொண்டேன். உனக்கே அந்த வேலையைத் தருகிறேன்' என்று சொல்லித் தன் முத்திரை மோதிரத்தைக் கொடுத்து, கீதவாத்தியங்களோடு ஊர்கோலம் வரச்செய்து இவரை மந்திரியாக்கினான்.

இம்மதியூகி மந்திரியின் கட்டளையில்லாமல் ஒருவரும் ஒன்றுஞ் செய்யக்கூடாது. சில மாதங்களின் பின் மந்திரி தேசத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுப் போய், ஒருகாலத்திலும் விளையாத தானிய விளைவுகள் எங்குமுண்டாயிருக்கக் கண்டார். அந்தத் தானியங்களையெல்லாம் கட்டிக் களஞ்சியங்களிற் சேர்த்து வைத்தார். அவர் வைத்த தானியங்களுக்கு அளவேயில்லை. இப்படியே ஏழு வருஷமுஞ் சேகரித்த பிற்பாடு, கொடிய பஞ்சம் வந்தது. பிரஜைகள் ராஜனிடம் வந்து உணவுக்காக மனுச்செய்தார்கள். அரசன் அவர்களைப் பார்த்து, 'நீங்களெல்லாரும் மந்திரியிடம் போங்கள், அவர் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்யுங்கள்' என்று அனுப்பினான். அவர்கள் பின்பு மந்திரியிடம் முறையிட்டார்கள். இவர் களஞ்சியத்திலுள்ள தானியங்களைச் சொற்ப விலைக்கு விற்கச்செய்தார்.

## மதியூகி மந்திரி (ஐந்தாம் பாகம்)

இதைக் கேள்விப்பட்டுப் பரதேசங்களிலுள்ளவர்களும் வந்து தானியங்களை வாங்கிக்கொண்டுபோனார்கள்.

பன்னிரு சகோதரரின் தகப்பனும் எல்லாரிலும் இளைய வனைத் தன்னிடம் வைத்துக்கொண்டு தானியத்துக்காக மற்றப் பிள்ளைகளை அத்தேசத்துக்கு அனுப்பினான். தந்தை அனுப்பின பத்துப்பேரும் அத்தேசத்துக்குப் போய், மந்திரி முன்னிலையில் முகங்குப்புற விழுந்து வணங்கினார்கள். உடனே மந்திரி அவர்களைத் தன் சகோ தாரென்று அறிந்தும் அதை வெளிக்குக் காட்டாமல் அவர்களுக்கு முன்னிருந்த குணம் மாறிவிட்டதோ என்று அறியும்படி அவர்களோடு கடினமாய்ப் பேசினார். அவர்களோ இவரைத் தங்கள் தம்பியென்று அறியவில்லை. இவர் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் உளவுபார்க்க வந்த வர்களா?' என்று கேட்க, சகோதரர்கள் பயந்து, நடு நடுங்கி, 'ஆண்டவரே! நாங்கள் உளவுக்காரர் அல்ல' என்று தங்கள் சரித்திரத்திற் சில சொன்னார்கள்.

அதுகேட்டு யோசேப்பு அவர்களுக்குப் பயம் உண் டாக்க நினைத்து, அவர்களை மூன்று நாள் சிறைச்சாலையில் வைத்து, உங்களுக்குச் சகோதரன் ஒருவன் தந்தையிடம் இருக்கிறானென்று சொன்னீர்களே, நீங்கள் உயிரோ டிருக்க வேண்டுமானால் அவனைக் கொண்டுவாருங்கள். அதுவரையில் உங்களிலொருவன் அவனுக்கீடாக இங்கே காவலி லிருக்கட்டும்' என்று சொல்லிக் கோணிகளில் தானியம் நிரப்பி, அவைகளில் தானியத்துக்காக அவர் கள் கொடுத்த பணங்களையும் அவர்களுக்குத் தெரியாமல் வைத்து அவர்களை அனுப்பிவிட்டார். அவர்கள் வழி யில் 'நமது தம்பிக்கு நாம் செய்த தோஷத்தின் பலன் இப்போதுதான் நமக்குச் சம்பவித்தது' என்று பேசிக் கொண்டு போனார்கள். அவர்கள் ஓர் இடத்தில் தங்கி உணவுக்காக மூட்டையை அவிழ்த்துப் பார்த்தபோது அவர்கள் கொடுத்த பணமும் இருக்கக் கண்டு ஐயோ! இதென்ன? அபாயமாய் முடியுமோவென்று துக்கித்து ஊர்போய்ச் சேர்ந்து நடந்த சங்கதிகளையெல்லாந் தகப்

பனுக்குச் சொன்னார்கள். இளைய மகனை யழைத்து வரும்படி சொன்ன சங்கதியைக் கேட்டு அவனை யனுப்புவதற்குத் தகப்பன் சம்மதிக்கவேயில்லை. ஆயினும் பஞ்சத்தின் கொடுமையினாற் பின்னுந் தானியம் வாங்கப்போவது அவசிய மாகையாற் கடைசியாய்ச் சம்மதித்தார். பிற்பாடு அவர்கள் கோணிகளிலிருந்த பணங்களையும், வேறு காசுகளையும் நற்பண்டங்களையும் எடுத்துக்கொண்டு இளைய சகோதரனோடு மந்திரி அரமனை வந்து சேர்ந்தார்கள். மந்திரி அவர்களைக் கண்டதும் தமது ஊழியக்காரனை யழைத்து நல்ல போஜனம் ஆயத்தஞ்செய்யும்படி சொல்லி அவர்களை யழைத்துப்போகும்போது, அவர்கள் தங்களைச் சிறையிடப் போகிறாரோ என்று நினைத்துப் பயந்தார்கள். அப்போது இவர் அவர்களை அஞ்சாதிருக்கச் செய்து போஜனங்கொடுத்து, இளைய சகோதரனைக் கண்டு மிகவும் இரங்கி அழுதார். மற்ற ஜனங்கள் இதைக் கண்டு பிரமித்தார்கள்.

சிலநாட்கள் சென்றபின் மறுபடியும் இவர் அவர்களைப் பார்த்து, 'சகோதரர்களே! நீங்கள் உங்களில் ஒருவன் காணமற் போய்விட்டான் என்று சொன்னீர்களே, நீங்கள், விற்ற அந்தச் சகோதரன் நான்தான். நான் எந்த உபத்திரவத்திலிருந்தாலும் உண்மையுள்ளவனாக நடந்து கடவுளுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து வந்ததினாலே, அவர் என்னைக் காப்பாற்றி, நீங்கள் தள்ளிய ஆழக்குழியிலிருந்து இந்த அரசன் அரமனையிற் சேர்த்தார். உங்களையெல்லாம் மன்னித்துப் போஷிப்பேன். இன்னும் ஐந்து வருஷம் பஞ்சமிருக்கும். நீங்கள் தகப்பனாரிடம் போய் இவைகளைத் தெரிவித்து அவரையுங் குடும்பத்தாரையும் அழைத்து வாருங்கள்' என்று சொல்லி யனுப்பினார்.

இச்சங்கதிகளைத் தகப்பனார் கேட்டு அகமகிழ்ந்து குடும்ப சகிதம் தம் அருமை மகனிடம்போய்ச் சேர்ந்தார்.

இவர் அவர்களை அருமை பெருமையாய் அங்கீகரித்து, அவர்களுக்கு ராஜதரிசனம் கிடைக்கப்பண்ணினார். அரசனும் சந்தோஷப்பட்டு, அவர்கள் குடியிருப்பதற்குச் சகல வளங்களும்பொருந்திய ஒரு நாட்டை இனமாகக் கொடுத்தான். அங்கே அவர்கள் சந்தோஷ சமாதானத்தோடு வாழ்ந்து வந்தார்கள்.

## 15. நாயும் எஜமானும்

கிழக்குத் தேசத்திலுள்ள நாட்டில் வசித்திருந்த ஒருவன் மிக அருமையாய் ஒரு நாயை வளர்த்தான். அது வேட்டையாடுவதிலும், வீட்டைப் பாதுகாப்பதிலும் அதிக சாமர்த்தியமுள்ளது. அதன் அழகையும் விவேகத்தையும் கண்ட எவரும் வியந்துகொள்ளுவார்கள். இப்படியிருக்குங்காலத்தில், ஒருநாள் அந்த நாயின் எஜமான் தன் சொந்தச் செலவுக்காகப் பணம் அகத்தியம் வேண்டியிருந்ததால் தன் நாயை வேறூர் கிராமத்திலுள்ள ஒரு திரவியஸ்தனிடம் ஈடுவைத்து அடைமானப்பத்திரம் எழுதி நூறு ரூபாய் கடன் வாங்கினான்.

அவன் தன் ஊருக்கு வந்துவிட, நாய் அந்த ஐசுவரியவான் வீட்டிலிருந்தது. ஒருநாள் அவ்வீட்டில் திருடன் நுழைந்து நான்கு பணப்பையை யெடுத்துக் கொண்டு வெளியே போகும்போது, அங்கிருந்த நாய் அவனைக்கண்டு திருடனென்றறிந்து அவனைப் போகவொட்டாமல் தடுத்துமேலே பாய்ந்து கடித்துக்கொன்று, அவன் திருடின பணப்பையை வாயினால் கௌவி ஓரிடத்தில் வைத்துவிட்டுத் தனவந்தனைக் குரைத்து எழுப்பினது.

பணக்காரன் நித்திரைவிட்டெழுந்து, திருடன் கடிபட்டு இறந்து கிடப்பதையும், ஓரிடத்திற் பணப்பைக ளிருப்பதையும் பார்த்து மிகச் சந்தோஷம் அடைந்தான் மறுநாட்காலையில் தனக்குச் செய்த உபகாரத்திற்காக

நாய்க்குத் தகுந்த உணவுகள் கொடுத்து, அதையும் விடுதலைசெய்ய எண்ணி, 'நான் கொடுத்த ரூபாய் நூறும் வட்டியுடன் பெற்றுக்கொண்டேன்' என்று ஒரு பற்றுச்சீட்டும், நாய் தனக்குச் செய்த உபகாரங்களைப்பற்றிய சீட்டொன்றும் எழுதி, அதன் கழுத்திற் கட்டி, 'உன் எஜமானிடத்திற்குப் போ' என்று சொல்லியனுப்பினான்.

நாய் அவ்வீட்டைவிட்டு அதிக ஆவலுடன் தன் வீட்டின் சமீபமாய் வந்தது. எஜமான் அதைக் கண்டு, 'ஓ, ஓ! அதை ஈடாக வைத்து ரூபாய் வாங்கின பணக்காரனை மோசஞ்செய்து வருகிறது. நம்முடைய வார்த்தைக்குப் பங்கம் வந்துவிட்டதே. இந்த நாயிருப்பதினும் இறப்பதே நன்று,' என்று கோபம் அதிகரிக்கவே, தீர்க்க ஆலோசனையின்றிப் பெரிய தடியால் அதன் தலையில் அடித்தான். நாய் உடனே கீழே விழுந்து செத்தது.

நாய் செத்தபிற்பாடு அதன் கழுத்திற் கட்டிய சீட்டுகளைக் கண்டு அவைகளென்னவென்று அவிழ்த்துப் பார்த்தான். அவைகளில் எழுதிய சங்கதிகளையெல்லா மறிந்து, 'ஐயோ! இவ்வளவு உபகாரங்கள் செய்த நாயை மூடத்தனமாய்க் கொன்றுவிட்டேனே. இனி நாய் கிடைப்பதெப்படி' என்று மனவருத்தப்பட்டான். இதனாலல்லோ முதியோர் 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்று சொன்னார்கள்.

## 16. எதிரொலி

ஒரு பையன் விளையாடுவதற்குத் தன் தகப்பனாருடைய தோப்புக்குப் போய் வருவான். சில வேளைகளில் அங்குள்ள கமுகு, வாழை, பூஞ்செடிகளுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து ஊற்றுவான். அந்தக் கிணறு ஆழமாயிருந்தது. பையன் தண்ணீர் இறைக்கும்போது ஆமையொன்று தண்ணீரில் நீந்தி விளையாடுவதைக் கண்டான். அதை அவன் உற்றுப் பார்த்துக்

126807

கொண்டிருக்கையில், அது மறைந்துவிட்டது. அப்போது அவன் ஆமையைக் கண்ட விநோதத்தினாலே, 'ஆ, ஆ!' என்று உரத்த சத்தமாய்ச் சிரித்தான். அவன் சிரித்ததுபோலவே ஒரு சத்தம் அவன் காதில் விழுந்தது. அவன், 'யாரோ ஒருவன் கீழே நிற்கிறான். அவன் தான் இப்படிச் சிரிக்கிறான். கிணற்றின்கீழ் இருட்டாயிருக்கிறபடியால், அவன் இருப்பது தெரியவில்லை' என்று நினைத்து 'யார் அங்கே? இங்கேவா!' என்று கூப்பிட்டான். உடனே அவன் அழைத்த மாதிரியாகவே சத்தம் திரும்பவும் பிறந்தது. அவன், யாரோ அங்கே நின்று தன்னைப் பரியாசம் பண்ணுகிறானென்று நினைத்து அவனை அறியக் கிணற்றின் நாலுபக்கமுஞ் சுற்றியோடி, எட்டிப்பார்த்து, 'இங்கே யாரும் நிற்பதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. படிக்கட்டுக் கல்லுமில்லை. குருவிதானும் இருப்பதற்குக் கல்லின் முனையுங்கூட இல்லை. அப்படியிருக்க இந்த வீரன் எங்கே நின்று என்னைக் கேலி பண்ணுகிறானோ தெரியவில்லையே' என்று கோபத்தோடே கெட்ட வார்த்தைகள் சொல்லித் தூஷித்தான். அந்த தூஷணங்களே திரும்பவும் தெளிவாய்த் தொனித்தன. அப்பொழுது சிறுவன் ஆச்சரியப்பட்டுக் கோபந் தணிந்து, 'இதைத் தகப்பனாரிடம்போய் அறிவிப்பேன்' என்று தீவிரமாய் வீட்டுக்கு ஓடினான். தகப்பன் 'ஏன் இப்படி இளைக்க இளைக்க ஓடி வருகிறாய்? என்ன விசேஷம்?' என்று கேட்டான். அவன், 'யாரோ ஒருவன் நம் தோப்பிலுள்ள கிணற்றுக்குள் நின்று, என்னைச் சிரித்துப் பரியாசம்பண்ணி வைதான். நான் கிணற்றின் நாலு பக்கமும் பார்த்தும் அவனைக் காணவில்லை' என்றான்.

தந்தை சற்று யோசித்து, 'மகனே! நீ கிணற்றண்டை நின்று உரக்கச் சிரித்துப் பேசினாயோ? முதல்முதல் கெட்ட வார்த்தைகள் உன் வாயிலிருந்து வந்தனவோ?'

என்று கேட்டான். உடனே பையன் வெட்கப்பட்டுப் பயத்தோடு 'ஆம், ஐயா! மெய்தான்' என்றான்.

தகப்பன் அதைக்கேட்டு மகனைப் பார்த்து, 'பயப்படாதே! இது முதல்முறை யானதினாலே மன்னித்து விட்டேன். அங்கே ஒருவனுமில்லை. நீ பந்தைச் சுவரிலே எரியும்போது, எப்படி அது அடிபட்ட இடத்திலிருந்து திரும்பவும் எதிர்நோக்கி வருமோ, அப்படியே நீ பேசின வார்த்தைகளும் கிணற்றின் சுவரிலே பட்டுத் திரும்பவும் உன் காதில் வந்து விழுந்தன. இதற்கு எதிரொலியென்று சொல்லுவார்கள். மலை அல்லது குன்றுகளின் அடிவாரத்தில் நின்று ஒருவன் சத்தமிட்டால் அதே சத்தம் திரும்பவுங்கேட்கும். "வாய் நல்லதானால் ஊரும் நல்லது" என்றபடி நீ பொறுமை கோபம் அற்றவனாகவும், தாழ்மையும் பட்சமுமுள்ளவனாகவும் மற்றவர்களோடு பேசினால், அவர்களும் இதமாய் உன்னோடு பேசுவார்கள். "தினை விதைத்தால் தினையறுப்பான். வினை விதைத்தால் வினையறுப்பான்." பிறர் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அதையே நீயும் அவர்களுக்குச் செய்' என்று புத்திமதிகள் சொன்னான்.

## 17. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

ஐதராபாத் இராச்சியத்தில் தோலாபுரி என்னுமோர் கிராமம் உண்டு. இதற்கு நிறுக்கும் நகரென்றர்த்தமாம். இப்பெயர் வந்த விதத்தை முன்னோர் சொல்லும் ஒரு கதையினால் அறிந்துகொள்ளலாம்.

இவ்வூருக்குப் பக்கத்தில் ஓர் ஆறு இருக்கிறது. அக்பர் சக்கரவர்த்தி ஒருநாள் ரதகஜதுரக பதாதிகளுடன் இக்கிராமத்தில் வந்திறங்கி, அந்த ஆற்றைத் தாண்டிப் போகவேண்டியதாயிருந்தது. அவ்வாற்றில் பாலமில்லாததினாலும், அது ஆழமாயிருந்ததினாலும்,

தோணி படவுகளில் ஏறிப்போகவேண்டும் அல்லாமல், அதைத் தாண்ட வேறோர் வகையுமில்லை. இதற்காக அங்கே தோணி படவுகள் எப்போதும் இருக்கும்.

அந்தச் சக்கரவர்த்தி இக்கரையில் தன் யானைமீ திருந்துகொண்டு, தன் சேனையைத் தோணிகளில் அக் கரைக்கு அனுப்பினன். சேனை போய் அக்கரைச்சேர அதிக நேரம் பிடித்தமையால், பொழுதுபோக்க ராஜன் அங்கு நின்ற படவுக்காரனோடு பேசிக்கொண்டிருந்தான். படவுக்காரனும் அரசனோடு பல சம்பாஷணைகள் செய்து, முடிவில் 'யானை, குதிரை முதலான மிருகங்களின் நிறை யைச் சொல்ல நான் வல்லவன்' என்று சொன்னன். அப் பொழுது சக்கரவர்த்தி இவன் புளுகுக்குப் பேர்போனவ னென்றும், இவன் மூடத்தனத்திற்காக இவனை வெட் கப்படுத்தவேண்டுமென்றும் மனதில் நினைத்து 'நான் ஏறியிருக்கும் யானையின் நிறை எவ்வளவு சொல்' என்றான்.

படவுக்காரன் பாகனைப் பார்த்து, யானையைத் தோணியில் ஏற்றச் சொன்னன். ஏற்றியபின் தோணி யைத் தள்ளிக்கொண்டுபோய்த் தண்ணீருக்குள் அது எவ்வளவமுங்கினதோ, அவ்வளவின் மட்டாகத் தோணி யின் பலகையின்மேல் இரேகை கீறினன். பிற்பாடு யானையைக் கரையில் இறக்கிவிட்டுத் தோணியைத் திரும் பவும் ஆற்றிற் கொண்டுபோய், முன் கீறின இரேகை மட்டத்திற்குத் தோணி மூழ்குமளவுங் கற்களை யேற்றி னன். பிற்பாடு அக்கற்களைக் கரையிற் கொட்டி, அவை களைக் கொஞ்சங் கொஞ்சமாக நிறுத்துவந்த நிறையைக் கூட்டி, யானையின் பாரம் இவ்வளவென்று சொன்னன். சக்கரவர்த்தி அவனுடைய புத்தி சாமர்த்தியத்தை வியந்து, அந்த ஊருக்குத் தோலாபுரியென்று பெயரிட்டு, அவ்வூரை யவனுக்கு இனமாகக் கொடுத்தான்.

## 18. கழுகு

கழுகானது நாம் அடிக்கடி பார்க்கும் பருந்தைப் போலிருக்கும். சிறு கழுகு அணில், எலி, புரு, கோழிக் குஞ்சு முதலானவைகளை இருஞ்சிக் கொண்டுபோகும். பெரிய கழுகு ஆட்டுக்குட்டி, நரி, முயல் முதலானவைகளைப் பிடித்துக் கொண்டுபோகும். கழுகுகளில் அழகுள்ளதாகிய பொன்னிறக் கழுகுக்குக் கழுத்தில் மஞ்சள் வர்ணமுண்டு. அதனுயரம் மூன்றடி. சிறகு விரிக்கும் போது ஏழடி நீளமிருக்கும். அதன் இறக்கைகள் செங்கல் மங்கலாயிருக்கும். கழுகுகளுள் மற்றொரு வகையாகிய பாம்புக்கழுகு சர்ப்பங்களைக் கண்டால், அவைகளின்மேற் கல் விழுகிறதுபோல விழுந்து, தலையைக் கௌவி எடுத்துக்கொண்டுபோகும்.



கழுகின் மூக்கு உறுதியும் வளைவுங் கூர்மையுமுள்ளது. கழுகின் கண்கள் தீக்ஷண பார்வையுடையன. ஆகையாற் கழுகுகள் கடு வெயிலிலும், ஆகாயத்தில் அதிக தூரத்திலிருந்து இரைகளைக் கூர்மையாய்ப் பார்த்து, அங்கிருந்து அம்புபோற் பாய்ந்து, பலமுள்ள நகங்களால் எடுத்துக் கொண்டு பறந்துபோகும்.

கழுகு சில வேளைகளில் இரையை எடுக்கச் சமயம் கிடைக்கும்வரைக்கும், அதைப் பார்த்துக்கொண்டே, சில நாழிகை மேலே வட்டமிட்டு, சமயம் வாய்த்தவுடனே ஒரே பாய்ச்சலாய் வீழ்ந்து அவ்வுணவை இருஞ்சிக் கொண்டுபோகும்.

செங்குத்தான பாறைகளில் அல்லது ஏகாந்தமான மலைச்சிகரங்களில் கழுகு கூடுகட்டும். அது கோழியைப் போல் அநேக முட்டையிடுகிறதில்லை. இரண்டு மூன்று முட்டைகள் மாத்திரமிடும். கழுகு அதிக கவலையோடு விதம்விதமான இரை தேடிக்கொண்டு வந்து, குஞ்சுகளுக்குக் கொடுத்து, அவைகளை வளர்க்கும். சில வேளைகளிற் பெருங்கழுகு சிறு குழந்தை ஒருவருமின்றித் தனியே கிடந்தால், அதையுந் தூக்கிப்போய்க் குஞ்சுகளுக்குக் கொடுக்கும். கழுகுகள் சுமார் நூறு வருஷம் பிழைத்திருக்கும்.

## 19. கழுகும் குழந்தையும்

சீமைத் தேசத்து மலைநாட்டிற் கிருஷிவேலை செய்கிறவர்கள் அறுப்புக்காலத்தில் வயலுக்கு மனைவி மக்களோடு போவார்கள். ஏனென்றால், அங்கே யடிக்கடி மழை பெய்வதினால் வெயிலிருக்கும்போதே விளைவுகளைச் சீக்கிரமா யறுத்து வீட்டிற்குக் கொண்டுவர வேண்டியதாயிருக்கும். சில வருஷங்களுக்கு முன்னே, அவர்களில் ஒருத்தி தனது நாலைந்து மாதக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு வயலிலுள்ள கோதுமைக் கதிர்களை அறுக்கப் போனாள். வயலண்டை போனவுடன் அக்குழந்தையை ஒரு மரநிழலில் விட்டுவிட்டு, அவள் வேலைக்குப் போய்விட்டாள். சமீபத்திலுள்ள மலைச்சிகர மொன்றில் இருந்த ஒரு ஜோடு கழுகுகள் குஞ்சு பொரித்திருந்தன. அவற்றில் தாய்க்கழுகு தன் குஞ்சுகளுக்காக இரைதேடி, மேலே ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கும்போது கீழே கிடந்த அக்குழந்தையைக் கண்டது. உடனே அது தீவிரமாய் இறங்கி, அங்கு வேலைசெய்கிறவர்களுக்குத் தெரியாமல் அதைத் தன் கூரிய நகங்களினால் தூக்கிக்கொண்டு, தன் அகன்ற சிறகை விரித்துப் பறந்து, ஆகாய மார்க்கமாய்ப்

போனது. இப்படி கழுகு பறந்து போகையிற் குழந்தை வீரிட்டழுத சத்தம் தாய்க்காதில் விழுந்தது. இச்சத்தங் கேட்டவுடனே, அவள் மனந்துடித்து ஓடித் தொடர்ந்தும், மற்றவர்களுங் கூச்சலிட்டு ஓடியும் பிரயோஜனம் இல்லாமற்போயிற்று. கழுகு குழந்தையைத் தன் கூட்டிற்கே கொண்டுபோய்விட்டது.

அப்போது அங்கே நின்றவர்கள் 'நாம் ஓடித் தொடர்ந்து மலைமேற் போனாலும் யாதொரு பயனும் விளையாது. ஏனென்றால் செங்குத்தான இடத்தில் அது கூடுகட்டியிருக்கிறது. அங்கே நாம் போகமுடியாது' என்றார்கள். அவர்களுள் புத்தியுள்ள சில வாலிபர், 'நீங்கள் சொல்வது சரிதான். ஆயினும் ஒருபாயஞ் செய்து பார்த்தால் நல்லது. எப்படியென்றால் நம்மிற் சிலர் அந்தச் செங்குத்தான பாறை மேலேறி அதன்மேல் நின்று கயிற்றை உறிபோற் கட்டி, அதில் ஒருவனை வைத்துக் கீழே இறக்கினால், அவன் சிசுவைக் கொண்டுவருவான்' என்றார்கள்.

அச்சிகரத்திற்குப் போக யாதொரு பாதையும் இராவிட்டாலும், நாலைந்து தைரியசாலிகள் அதிக பிரயாசப்பட்டு அச்சிகரத்திலேறினார்கள். உடனே அவர்கள் தாமதமின்றித் தமக்குள் ஒருவனை உறியில் வைத்துக் கழுகின் கூட்டிற்கு நேரே யிறக்கினார்கள். அப்போது தாய்க்கழுகு வந்து அவனோடு சண்டை செய்ய அவன் அதைத் தன் கையில் இருந்த தடியால் அடித்துத் துரத்திவிட்டுக் குழந்தை செத்துப்போயிற்றோ அல்லவோ வென்று கூட்டினுட் பார்த்தான். கழுகு குழந்தையைத் தான் முன் கொண்டுவந்து தின்ற மிருகங்களின் எலும்பின்மேற் பத்திரமாய் வைத்திருப்பதையும், அது உயிரோடிருப்பதையும் கண்டான். அந்த க்ஷணமே பிள்ளையைத் தன் சால்வையிற் பலமாய்க் கட்டிக்கொண்டு, தாய்க்கழுகு ஆண்கழுகோடு வந்தாலும்

வருமென்று பயந்து, மேலே நின்றவர்களுக்குச் சைகை காட்ட, அவர்கள் கயிற்றை இழுத்து அவனை மேலே தூக்கிவிட்டார்கள். குழந்தை உயிருடன் இருக்கக் கண்டு எல்லாரும் அதிக சந்தோஷங்கொண்டாடித் தாயிடம் அக்குழந்தையைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவள் அளவற்ற களிப்படைந்து தன் பிள்ளையை வாங்கி, அப்பரோபகாரிகளுக்கு நன்றி கூறிப் பிள்ளையின் சுகத்திற்காவது உயிருக்காவது யாதொரு மோசமுஞ் சம்பவியாது காத்த கடவுளைத் துதித்துத் தன் வீடு சென்றாள்.

## 20. நீதிமொழிகள்

ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது.

பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை!

தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை.

சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.

கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம்.

அகந்தை வந்தால் இலச்சையும் வரும்; தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு. அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்; ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு.

வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம்; கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான்.

உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும்; துன்மார்க்கனோ தன் துன்மார்க்கத்தினால

விழுவான். செம்மையானவர்களுடைய நீதி அவர்களைத் தப்புவிக்கும்; துரோகிகளோ தங்கள் தீவினையிலே பிடிபடுவார்கள்.

அந்நியனுக்காகப் பிணைப்படுகிறவன் வெகு பாடுபடுவான்; பிணைப்படுவதை வெறுப்பவன் சுகமாயிருப்பான்.

நீதிமான் தன் மிருகஜீவனைக் காப்பாற்றுகிறான்; துன்மார்க்கருடைய இரக்கமும் கொடுமையே.

சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத்துவான்; பொய்ச் சாட்சிக்காரனோ வஞ்சகத்தை வெளிப்படுத்துவான்.

தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்.

வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப்போலிருக்கிறான்.

புத்திமதிகளைத் தள்ளுகிறவன் தரித்திரத்தையும் இலச்சையையும் அடைவான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ கனமடைவான்.

கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை. அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.

திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்.

அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்.

பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே; திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக்கொள்ளாதே.

தேனைக் கண்டுபிடித்தாயானால் மட்டாய்ச் சாப்பிடு; மிதமிஞ்சிச் சாப்பிட்டால் வாந்திபண்ணுவாய்.

உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு.

படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான்; கல்லைப் புரட்டுகிறவன்மேல் அந்தக் கல் திரும்ப விழும்.

இருவழிகளில் நடக்கிற திரியாவரக்காரன் ஐசுவரியவானாயிருந்தாலும், நேர்மையாய் நடக்கிற தரித்திரன் அவனிலும் வாசி.

## 21. நெருப்புக்கோழி

நெருப்புக்கோழி யென்பது பட்சிகளிலொன்று. அதற்குத் தீக்கோழி என்றும் பெயர். அது மிக வெப்பமுள்ள இடங்களிற்றான் காணப்படும். அது மற்றப் பறவைகளிலும் அதிக உயரமுள்ளது. அதன் உயரம் சுமார் ஏழு அல்லது எட்டு அடி. அதன் கால்கள் வான்கோழியின் கால்களைப்பார்க்கிலும் நீண்டு பலமாயிருக்கும். கால்களால் உதைக்குமானால், மனுஷருடைய எலும்புகளும் நொறுங்கிப்போகும். தீக்கோழி தன் முதுகில் இரண்டு



மனிதர்களைச் சுமந்துகொண்டு ஓடத்தக்க பலமுள்ளது.

அதன் கழுத்து நீண்டு சுமார் மூன்றடி உயரமுள்ளதாய் இருக்கும்.

தீக்கோழிக்குச் சிறகுகளிருந்தும் அவைகளாற் பிரயோஜனமில்லை. ஏனெனில் மற்றப் பறவைகளைப்போல் உயரப் பறந்துபோகமாட்டாது. ஓடுங்காலத்தில் சிறகுகளை விரித்துக்கொண்டு, குதிரையைப்பார்க்கிலும் அதிக வேகமாயோடும். அப்பறவையின் பிறப்பிடம் மிகுதியாய் ஆப்பிரிக்கா கண்டமே. இது மிகவும் பயப்படுகிற பட்சியாதலால் மனுஷர் சஞ்சரிக்கும் இடங்களில் வசிக்கமாட்டாது. அது எப்போதுந் தன் இனங்களுடன் கூடியிருக்குமல்லாமல் தனியே இராது. அதன் கழுத்து நீண்டு இருப்பதால், அது நின்றநிலையிலே எட்டுத் திசைகளையுஞ் சுற்றிச் சுற்றிப் பார்க்கும். அது சிங்கம் முதலிய காட்டு மிருகங்களையாவது, மனிதரையாவது கண்டாற் பயந்து ஓடும். அது புத்தியில்லாத மூடப்பட்சி. ஆகையாற் பயந்து ஓடும்போது ஒளித்துக்கொள்ள நினைத்துத் தன் தலையைமாத்திரம் மணலிற் புழைத்துக்கொள்ளும். இப்படிச் செய்வதினால் தன் பெரிய உடம்பையும், நீண்ட கால்களையும் மற்றவர்கள் காணமாட்டார்கள் என்று அது எண்ணுகிறது.

ஆப்பிரிக்காவிலுள்ள வேடர்கள் இதன் மடமையையறிந்தவர்கள் ஆதலாற் செத்த நெருப்புக்கோழியின் தோலைப் போர்த்து, மேய்ந்துகொண்டிருக்குங் கோழிகளின் பக்கத்தே போவார்கள். அதைக் கண்ட தீக்கோழிகள், மனுஷரென்று அறியாமல், தம் இனப்பறவை வருகிறதென்று நினைத்து, ஓடாமல் நிற்கும். வேடனே மெல்ல மெல்ல அவைகளை யடுத்து அம்புகள் எய்து கொல்லுவான்.

இப்பட்சிகள் முட்டையிடுங் காலத்திற் கூடுகெட்டும் வழக்கமில்லை. மணலுள்ள இடத்திற் குழிதோண்டி அதற்குள்ளே முட்டையிடும். முட்டை தேங்காய்போலப்

பெரிதாயிருக்கும். அதன் கனம் மூன்று இராத்தல். இம்முட்டைகள் ஆறு வாரத்தின்பின் குஞ்சுகளாகின்றன. முட்டையின் ஓடுகளை ஆப்பிரிக்காவிலுள்ளவர்கள் தண்ணீர் வைக்கும் பாத்திரமாக உபயோகப்படுத்துகிறார்கள். குஞ்சுகள் இரண்டு வருஷம் வரையிலும் பலமில்லாதவைகளாயிருக்கும். அந்த இரண்டு வருஷத்திற்கு இடையில் அதிக மழை பெய்யுமானால் குஞ்சுகள் செத்துப்போகும்.

தீக்கோழிகள் புல் பயிர் தானியங்கள் இவைகளைத் தின்னும். இப்பட்சிகள் தோட்டங்களில் அல்லது வயல்களிற் போகுமானால் அங்குள்ள பயிர்களையெல்லாந் தின்று நாசம் பண்ணும். தென்னாப்பிரிக்காவிலுள்ளவர்கள் இவைகளை வளர்க்கிறார்கள். சிறகின் பக்கங்களிலும் வாலிலுமுள்ள வெண்ணிற இறகுகள் அதிக விலையுள்ளன. அவர்கள் அவைகளைக் கொய்து எடுத்து விற்பார்கள். அந்த இறகுகளைப் பல தேசவாசிகள் மிகவும் பிரியமாய் வாங்கி அலங்காரமான விசிறி முதலியவை செய்துகொள்வார்கள்.




சுமார் அறுநூறு வருஷங்களுக்குமுன்னே 'உவேல்ஸ் இளவரசன்' ஆகிய இங்கிலாண்டின் ராஜகுமாரனோடு, மற்றோர் அரசன் தன் தலைச்சிராவில் நெருப்புக்கோழியின் இறகு மூன்றை யணிந்து, யுத்தஞ்செய்தான்: அவனை இளவரசன் வென்று, அந்த இறகுகளைப் பறித்து, ஜெய சின்னமாகத் தன் தலைச்சிராவில் அணிந்துகொண்டான். அதுமுதல் உவேல்ஸ் இளவரசராக வருவோர் எல்லாரும் இந்த ஜெய சின்னத்தையே வழங்கி வருகிறார்கள்.

## 22. இரக்கமுள்ள கொல்லன்

ஒரு தேசத்தில் ஒரு பெரிய சத்திரமிருந்தது. அதில் அநேக பிரயாணிகள் வந்து தங்கிப்போவார்கள். ஒரு நாட் சாயங்காலம் இந்தச் சத்திரத்தின் பெரிய அறையில் பல ஆண்களும் பெண்களுங் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். நற்குணமுந் தைரியமுந் தேவ பக்தியுமுள்ள கொல்லனொருவனும் அங்கே வந்து சேர்ந்தான். அவன் தன்னைப்போல பிறரையும் நேசிக்கும் நற்குணமுள்ளவன். இவர்களெல்லாரும் அங்கே யிருக்கும்போது, திடீரென ஒரு நாய் ஓடிவந்து இவர்கள் பேசிக்கொண்டிருந்த அறையின் வாசலில் நின்றது.

நாய் மிகவும் பயங்கரமான தோற்றத்துடன், கவிழ்ந்த தலையும், சிவந்த கண்களும், மடிந்த செவிகளுமுடையதாகக் காணப்பட்டது. அங்கிருந்த கொல்லன் அது பைத்தியம்பிடித்த வெறிநாயென்று அறிந்து, சத்திரத்திலிருக்கும் பிரயாணிகளைக் கடிக்கும் என்று பயந்து, 'பிரயாணிகளே! வெறிநாய், வெறிநாய்! ஜாக்கிரதையாயிருங்கள்!' என்று கூப்பிட்டு எச்சரிக்கை செய்தான். அதைக் கேட்டு அறைக்குள் இருந்தவர்கள், 'ஐயோ! வெறிநாய் வந்துவிட்டது' என்று திகில்கொண்டு அந்த நாயையோட்டிவிடவேண்டும் என்று பெருங் கூச்சலிட்டார்கள். அதுவோ போகவில்லை. அவர்கள் வெளியே விலகியோடுவதற்கு வேறுவழியுமில்லை. கதவைமூடித் தாழ் இடலாம் என்றால் நாய் கதவின் முன் நின்றது.

ஐயோ! அவர்கள் என்ன செய்வார்கள்? பெண்களோ அதிக பயங்கொண்டு நடுநடுங்கிக் கண்ணீர்விட்டுக் கூக்குரலிட்டு அழுதார்கள். அப்போது அந்த இரக்கமுள்ள கொல்லன் அந்தப் பரிதாப நிலையை யறிந்து வெறிநாய் நிற்பதையும், அறைக்குள்ளே ஜனங்கள் அலறியழுவதையும் பார்த்து, 'சிநேகிதர்களே! நீங்கள் ஒன்றுக்கும்

பயப்படவேண்டாம். பெருங்கருணையுள்ள கடவுள் உங்களைக் காப்பார். நீங்கள் பலர் இறப்பதினும், நான் ஒருவன் இறப்பது நல்லது. நான் இந்த நாயைப் பலமாகப் பிடித்துக்கொள்ளுகிறேன். நீங்களெல்லாருஞ் சீக்கிரமாக வெளியே ஓடிப் பிழையுங்கள்' என்று சொல்லி உடனே எதிரே வந்து அந்த நாயைப் பிடித்தான். அது பாய்ந்து அவனுடைய காலையுங் கையையுங் கடித்துக் காயப்படுத்தினது. கொல்லன் அந்தக் காயத்தால் உடம்பில் இரத்தம் ஓடுவதைக் கண்டும் அஞ்சாமல் அறையிலிருந்தவர்கள் யாவரும் வெளியே போகுமளவும் நாயை விடாமல் பிடித்துக்கொண்டிருந்தான். அந்த உத்தமன் அவர்களெல்லாரும் வெளியே போனதை அறிந்து, நாயைக் கைகளால் தூக்கிச் சுவரில் வீசி அந்த அறைக்குள் தள்ளி உடனே கதவை வெளியிலிருந்து சாத்தித் தாழிட்டான். அநேக ஜனங்கள் வந்து அவன் உடம்பைப் பார்த்து, 'இவனைப்போல இரக்கமுள்ள பரோபகாரியை நாம் இதுவரைக்கும் பார்த்ததில்லை. ஐயையோ! இந்த அன்புள்ள சற்குணனை யிழக்கப்போகிறோமே' என்று மிக்க துக்கங்கொண்டார்கள்.

கொல்லன் தன் உடம்பைச் சுகப்படுத்தும் எண்ணங் கொள்ளாமல், 'அறைக்குள் இருக்கும் நாய் இன்னும் யாரையாவது கடித்துவிடுமே' என்று நினைத்துப் பின்னும் துப்பாக்கி யொன்று தேடி யெடுத்து அதைச் சுட்டுக் கொன்றான்.

பிறகு தன்னுடம்பிலுள்ள இரத்தத்தைத் துடைத்துத் தனக்காக அழுகிறவர்களைப் பார்த்து, 'அன்பர்களே! நான் நாயைப்பிடிக்கப் போனபோதே அதனாற் கடிபட்டு, வெறிபிடித்து இறப்பேன் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். நான் என் கடமையைச் செய்து முடித்தேன். நீங்கள் அழாதிருங்கள்' என்று சொல்லித் தன் வீட்டிற்குப் போனான். அவன் அங்கே போய்,

'இப்போது எனக்கு வெறிவரத் தொடங்குகிறது. யாரை யாவது நான் கடித்தால் அவர்களும் என்னைப்போல வெறிகொண்டு இறப்பார்கள். ஆகையால் நானே என்னைச் சங்கிலியாற் கட்டிக்கொள்கிறேன்' என்று தன் கடையிலிருந்த இருப்புச் சங்கிலி ஒன்றை யெடுத்து அதன் ஒரு அந்தத்தை யொரு மரத்திற் கட்டி, மற்ற அந்தத்தை தன்னிடுப்பிலும் பூட்டிக்கொண்டான். பின்பு தன் சிநேகிதர்களை அழைத்து, 'உயிர்கொடுத்தாயினும் பிறர்க்கு நன்மை செய்யவேண்டும்' என்று புத்தி சொன்னான். அவனைச் சுகமாக்கும்படி அநேகர் பல முயற்சிகள் செய்தும் ஒன்றும் பலியாமல் அவன் வேதனைப் பட்டு ஒன்பதாம் நாளிலே கடவுள் பாதத்தை யடைந்தான். ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லையென்று சற்குருவாகிய இயேசுகிறிஸ்து நாதர் உரைத்ததற்கு இது ஒரு திருஷ்டாந்த நற்செய்கையே.

## 23. பிறனுக்கு நன்மை செய்பவன்

சற்குருவாகிய இயேசுகிறிஸ்துநாதர் இவ்வுலகத்திலிருந்தபோது அவருடைய இரக்கத்தையும் தயையையும்பற்றிக் கேள்விப்பட்ட ஒரு வித்வான் தன் மனச் சஞ்சலத்தை அவரிடத்திற் சொல்லி ஆறுதலடையலாமென்றெண்ணி அவரிடம் போனான். அவன் வியாகுலத்திற்குக் காரணம் சொத்து நஷ்டமானதா? குடும்பத்தில் யாராவது இறந்தார்களா? அல்லது திருடர் அவன் வீட்டிற் கன்னமிட்டார்களா? அல்ல. பார்த்தோர் அவனைத் தரித்திரனென்று எண்ணாமற் பெரிய உத்தியோகஸ்தனென்றும் நல்ல ஸ்திதியுள்ளவனென்றும் மதிப்பார்கள். நாடோறுந் தேவாலயத்திற்குப் போய்ச் சாஸ்திரத்தின்படி தொழுது வருவான். அப்படியிருக்க அவன் சஞ்ச




லத்திற்குக் காரணமென்ன? அவன் எல்லாவற்றையும் உண்மையோடு தவருமற் செய்துவந்தாலுந் தான் தேவனுடைய பிரியத்தின்படி நடக்கவில்லை என்றறிந்து, தேவசித்தத்தை நிறைவேற்றி, நித்திய பாக்கியத்தை அடையத் தான் என்ன செய்யவேண்டும் என்பதே.

அவன் போய் இதைக்குறித்து இயேசுகிறிஸ்துவைக் கேட்டான். இதற்குத்தரமாகச் சற்குருவானவர் கடுமையான தபசு முதலான முறையை அனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லுவார் என நினைத்தான். ஆனால் அவர் சாஸ்திரத்தில் இதைப்பற்றி என்ன உரைத்திருக்கிறதென்று வினவினர். அதற்கு அவன், 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்று எழுதியிருக்கிறதென்று சொன்னான். அதற்கு அவர், 'யதார்த்தமாய்ச் சொன்னாய், அப்படியே நீயுஞ் செய்' என்று சொன்னார். அவன், 'தேவனிடத்தில் உண்மையாய் நடந்தால் அவர் ஏற்றுக்கொள்வார். ஆனால் இங்கே பிறனிடத்திலும் அன்பாயிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அவன் யார்' என்று கேட்டான். அதற்கு மறுமொழியாக, அவர் பின்வரும் உவமையைச் சொல்லி விளக்கிக் காட்டினர்:—

'ஒருவன் ஒரு நகரத்தில் வியாபாரம்பண்ணிப் பணம் சம்பாதித்து, இனஜன பந்துக்களைப் பார்க்கும்படி திரவியத்தோடு சொந்தத் தேசத்திற்குப் புறப்பட்டுக் கெபிகளுள்ள பள்ளத்தாக்கு வழியாய்ப் போனான். அக்குகைகளிற் பிறர் சொத்தைக் கொள்ளையிட் டபகரிக்கும் பாதகர்கள் குடியிருந்தார்கள். அவர்கள் இவனைக் கண்டு, ஓடிவந்து அடித்துப் பணத்தைப் பறித்துக்கொண்டு, குற்றுயிராக விட்டுப்போனார்கள். இப்படி இவன் யாரு மற்றவனாய்க் கிடப்பதை அம்மார்க்கமாய் வந்த அத்தேசப் பெரிய நகரத்து ஆசாரியன் ஒருவன் பார்த்தும், தான் அங்கே நின்றால், கள்ளரால் தனக்கும் மோசம் வருமென்று எண்ணித் தீவிரமாய்ப் போய்விட்டான். பிற்பாடு அந்நகரத்துத் தேவாலயத்திற் பணிவிடை

செய்கிற ஒருவனும் அவ்வழியாய் வரும்போது, இவனைக் கண்டு, தன்னையுந் திருடர் கொல்வார்கள் என்று பயந்து வழிவிலகிப் போய்விட்டான். கடைசியாய் அந்நிய தேசத்தானாகிய சமாரியன் ஒருவன் அவ்வழியே வந்த போது, இவன் கிடக்கும் பரிதாப நிலையைக் கண்டு, மன முருகி, இவனைத் தூக்கிக் காயங்களைக் கழுவி, வேண்டிய உதவிகள் புரிந்து, அடுத்த ஊரிலுள்ள ஓர் சத்திரத்திற்குக் கொண்டுபோய், ஆகாரமும் ஔஷதமும் கொடுத்துச் சுகப்படுத்திவிட்டான். அவன் தன் சொந்த சுகத்தைப் பாராமலும் எந்த விக்கினத்திற்கும் பயப்படாமலும், இந்த நற்செய்கையைச் செய்தான். இந்த மூவரில் அந்தப் பரிதாப ஸ்திதியிலிருந்தவனுக்கு, நல்லவன் யார்?' என்று வித்துவானைப் பார்த்து இயேசுகிறிஸ்து நாதர் கேட்டார். அதற்கு அவன், 'இவனுக்கு இரக்கங் காட்டினவனே' என்றான். அப்போது அவர், 'இவ்விதமே நீயுஞ் செய்' என்று மறுபடியும் கற்பித்தார். நாம் நித்திய பாக்கியத்தை அடையவேண்டுமானால் கடவுளிடத்தில் அன்புகூருவதுமல்லாமல், பிறரையும் நமது சொந்த சகோதரரென்று நினைத்து அன்புகூரவேண்டும்.

## 24. தேக்கமரமும் நாணற் புல்லும்

ஒரு ஆற்றங்கரையில் நீண்டு வளர்ந்த தேக்கமர மொன்று நின்றது. ஆற்றின் ஜலம் மரத்தின் அடி மண்ணை யரித்ததினால், வேர்கள் மேலே கிளம்பியிருந்தன. வேரின் கீழே ஜலம் எப்போதும் தங்குங் காரணத்தால் அந்த மரம் நன்றாய்த் தளிர்த்துச் செழிப்பாயிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு நாணற் புல் நின்றது. கர்வமுள்ள தேக்கமரம் அடக்கமுடைய அந்த நாணலைப்பார்த்துச் சொன்னதாவது:—

'பிரயோஜனமில்லாத நாணற் புல்லே! நான் எவ்வளவு காற்று அடித்தாலும், அஞ்சாமல் நிற்கிறேன். நீயோ

சிறிது காற்று வீசினாலும் அங்குமிங்கு மசைந்து, விழுந்து விழுந்து, எழுந்துகொள்கிறாயே. அற்பப் புல்லாகிய நீ அதிக பலமுள்ள பெரிய விருக்ஷமாகிய என் பக்கத்தில் நிற்கலாமா! இப்படி நிற்க உனக்கு வெட்கமில்லையா?' என்று பலவிதமாக இகழ்ந்து பேசினது. அதைக்கேட்ட நாணற்புல் சொல்லும்:—

'ஐயா, தேக்க மரமே! உலகத்திலே பலவகையான பொருள்கள் இருக்கின்றன. எல்லாரும் பலமுடையவர்களா? சிலர் பலமுடையவர்களும், சிலர் பலமில்லாதவர்களுமாகத்தான் இருப்பார்கள். உன்னைப்பார்க்கிலும் அதிக பலமுள்ள மரங்களும் அநேகமிருக்கின்றன, அல்லவா? அம்மரங்கள் உன்னைப் பார்த்துப் பரியாசம் பண்ணினால், உனக்கு எவ்வளவு வருத்தமுண்டாகும்! அதைப்போல எனக்கும் வருத்த முண்டாகுமென்று நீ யேன் நினைக்கவில்லை? "பொறுத்தார் அரசாள்வார், பொங்கினர் காடுறைவர்" என்ற பழமொழி நீ கேட்கவில்லையோ? எப்போதும் பொறுமையும் அடக்கமும் வணக்கமுமுடையவர்களாய் நடப்பது நல்லது. அகங்காரமும் வீண்பெருமையுங் கொண்டாற் சீக்கிரம் அழிவு நேரிடும். "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது வீண்பெருமை" என்ற நீதிமொழியை நினைத்து அடங்கியிரு' என்றது.

இவைகளைக் கேட்ட தேக்கமரங் கோபித்து, 'அற்பனான நாணற் புல்லே! நீயா எனக்குப் புத்திசொல்லுகிறாய்? நல்லது! நீ இங்கே யிருக்கவிடுவேனா? பார்!' என்று பயங்காட்டினது.

சிறிது நேரத்திற்குள் பெரிய சூறைக்காற்று கிளம்பி, மும்முரமாய் மோதித் தேக்கமரத்தை நான்கு பக்கங்களிலும் ஆட்டி யசைத்துக் கிளைகளை முறித்து, வேரோடு சாய்த்துவிட்டது. நாணற்புல்லோ அடித்த காற்றுக்கெல்லாம் அசைந்தசைந்து அங்குமிங்கும் சாய்ந்து

கொண்டு இருந்தது. காற்று தணிந்தவுடன், அடக்கமும் பணிவுமுள்ள நாணற்புல் யாதொரு கெடுதியுமில்லாமற் சுகமாய் முன்போல நின்றது. வேரோடு சாய்ந்த தேக்க மரம் மிகவும் வெட்கப்பட்டு விசனத்தோடு கிடந்தது. அந்த மரத்தை உடையவன் வந்து கோடரியால் வெட்டித் துண்டு துண்டாக்கி யெடுத்துக்கொண்டு போனான்.

ஆதலால் நாம் அனைவரும் அகங்காரங்கொண்டு வீண் பெருமை பாராட்டாது, பொறுமையும், பணிவுமுள்ளவராக நடக்கவேண்டும்.

## 25. வெட்கமடைந்த வேட்டைக்காரர்

ஒரு பெரிய காட்டிற் புலிகள் அதிகப்பட்டதினால் வேட்டையாடி, அவைகளைக் கொல்லுகிறவர்களுக்குத் தகுந்த பரிசு கொடுப்பதாக இராஜாங்கத்தார் விளம்பரம் செய்தார்கள். அதனை யறிந்த மனிதர்கள் காட்டிற் புலியைக் கொல்லப்போவது மிக்க ஆபத்து என்று நினைத்து, ஒருவரும் போகவில்லை. ஒருகாலத்தும் புலியைக் காணாத இரண்டு வாலிபர்கள் மாத்திரம் புறப்பட்டார்கள்.

சிலர் அவர்களைப்பார்த்து, 'தம்பிமார்களே! "ஆழந் தெரியாமற் காலைவைத்தவன்" போல நீங்களும் புலிகளின் குணங்களையுந் தந்திரங்களையும் அறியாமற் காட்டிற்குப் போகப் புறப்பட்டீர்கள். "ஆய்ந்தோய்ந்து பாராதான் தான் சாகக்கடவன்" என்ற பழமொழியை நினைத்து ஒவ்வொன்றையும் யோசித்துச் செய்யவேண்டும். "ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு." அவசரப்பட்டு எதையுஞ் செய்யக்கூடாது. ஒருவன் அப்படிச் செய்தால் அவனுக்குத் தீங்கு வரும். ஆதலால் நீங்கள் போக வேண்டாம்' என்று தடுத்தார்கள்.

அந்த வாலிபர்கள் இருவரும் சிரித்து அலக்ஷியம் பண்ணி, 'பெரியோர்களே! எங்கள் வீரத்திற்குப் புலி

யொரு பெரிதா? எத்தனையோ புலிகள் எங்கள் கைகளாற் சாவதைக் காண்பீர்கள்' என்று வீண்பெருமை பேசி, ஆட்டுக்குட்டி யொன்றுந் துப்பாக்கி யிரண்டுங்கொண்டு ஜனங்களெல்லாந் தங்களை மெச்சும்படி ஆரவாரஞ்செய்து புறப்பட்டுப் போனார்கள்.

காட்டின் நடுவே போனதும், அவர்கள் என்ன செய்ய லாம் என்று ஆலோசித்துச் சூரியன் அஸ்தமிக்கும் போது, ஒரு மரத்தின் அடியில் ஆட்டுக்குட்டியைக் கட்டி னார்கள். 'ஆட்டின் சத்தங்கேட்டுப் புலிகள் இதைப் பிடிக்க வரும். நாம் மேலேயிருந்து சுடுவோம் என்று கருதி, இருவரும் அந்த மரத்தின்மேல் ஏறினார்கள். அவர்கள் அதில் ஏறிப் பாவைகளைப்போலக் கால் கைகள் சிறிதும் அசையாமல், பெரிய கிளைகளிலே துப்பாக்கி களையும் வைத்துக்கொண்டிருந்தார்கள். பனி மிகுதி யால் அவ்விருவருக்குங் கால் கைகள் விறைத்தன. இருள் வரவரப் பயமும் உண்டாயிற்று.

பின்பு அவர்கள், 'ஐயோ! நாங்கள் மனித சஞ்சார மில்லாத இந்தக் காட்டிலே வந்து கஷ்டங்களை ஏன் அநுபவிக்கவேண்டும். "மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்" என்பதைக் கவனியாமல் வந்தோம். நமது அகங்காரத்தினால் இப்படித் துன்பப்படுகிறோம்' என்று விசனப்பட்டு, எப்போது விடியும், எப்போது விடியு மென்று காத்திருந்தார்கள். நடுராத்திரியில் ஆட்டுக் குட்டி கத்துகிறதைக் கேட்டுப் புலியொன்று மெதுவாக வந்து பயங்கரமான சத்தமிட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அதைப் பிடித்துக்கொண்டுபோனது. புலியின் பயங்கரமான தொனியையும் பாய்ச்சலையும் கண்ட வாலிபர்கள் மிகவும் பயந்து கைகால்களெல்லாம் நடு நடுங்கிச் சுடமுடியாமல் துப்பாக்கியையுங் கீழே நழுவ விட்டார்கள். புலி தங்களிடத்தும் வருமோ என்ற பயத்தால் அவர்கள் அசையாமலிருக்க நினைத்தும்

உடம்பு நடுநடுங்கி விடியுமளவும் அம்மரத்தில் தங்கியிருந்தார்கள். விடிந்தபின்பு அவர்கள் இறங்கிப் பக்கங்களிற் புலியிருக்கிறதா என்று பார்த்தார்கள். இல்லாதது கண்டு, 'இனி உயிர்கொண்டு பிழைப்பதே நல்லது' என்று அங்கே விழுந்து கிடந்த துப்பாக்கிகளைக் கையாலெடுத்தார்கள்.

உடனே வியர்வை தங்கள் உடம்புகளி லொழுக, அவர்கள் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு, கால்கள் பிடரியில் அடிபட ஓடினார்கள். அவர்கள் ஓடிவருகிற வழியில் ஏரியொன்று இருந்தது. அங்கே ஆட்டுக்குட்டியின் தோலையும் எலும்புகளையுங் கண்டு, 'ஐயோ! புலி இங்கே யிருக்கும்' என்று பதை பதைத்தார்கள். அப்போதே ஆட்டுக்குட்டியைத் தின்று, அந்த ஏரியிற் சந்தோஷமாக நீராடிக்கொண்டிருந்த புலி வெளியே வரத் தொடங்கினது. அதைக் கண்ட வாலிபர்கள் துப்பாக்கிகளைக் கீழே யெறிந்து, ஒருவர் போனவழி மற்றொருவர்க்குத் தெரியாமலோடினார்கள்.

ஊர் சேர்ந்தவுடன், அங்குள்ளவர்கள் சிரித்து, அவர்களைச் சூழ்ந்து, சிலர் 'வீரர்களே! எத்தனை புலிகளைக் கொன்றீர்கள்?' என்றும், சிலர், 'ஆட்டுக்குட்டியுந் துப்பாக்கிகளும் எங்கே?' என்றுங் கேட்டார்கள். அவர்கள் 'ஏரி கரையிற் புலி! புலி!' என்று கூவி அநேகரைத் தம்முடன் வரும்படி கெஞ்சி யழைத்துப்போய், புலி அங்கே யில்லாமையால் துப்பாக்கிகளை யெடுத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். தம்முடன் வந்தவர்கள் தங்களைப் பலவிதமாகப் பேச அவர்கள் மிகவும் வெட்கப்பட்டுச் சிலநாள் வெளியேறாமல் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்.

ஆதலால் யோசியாமல் ஒரு காரியத்திற் பிரவேசித்தவன் மிக்க துன்பமும் வெட்கமும் அடைவான். "நுண்ணிய கருமமு மெண்ணித்துணி" யென்றும், "கூரம்பா

யினும் வீரியம் பேசேல்'' என்றும் கூறிய நீதிமொழிகளை நினைக்கவேண்டும்.

## 26. விநோத சித்திர வீடுகள்

மாணவரே! கைத்தொழிலில் வல்ல எந்தச் சிற்பாசாரிகளாலும் செய்ய இயலாத சில விநோத சித்திர வீடுகளைப்பற்றி நாம் இங்கே சில அடையாளங்கள் சொல்லுவோம். அவ் வடையாளங்களைக்கொண்டு நீங்கள் யோசித்து அவை இன்ன வீடுகளென்று சொல்லக்கூடுமா?



நீரிலும் நிலத்திலும் நிற்கும்படி நான்கு தூண்கள் நாட்டிய சுமார் ஐந்தங்குல உயரமுள்ள ஒரு விநோத வீடுண்டு. அதன் மேற்பக்கங் கறுப்பு நிறமுங் கீழ்ப் பக்கம் வெள்ளை நிறமும் உடையன. அதன் மேற்பக்கம் இரும்பைப்போன்ற உரத்த தகட்டாலுங் கீழ்ப்பக்கம் மிருதுவான தகட்டாலும் மூடப்பட்டிருக்கின்றன. அவ்

வீட்டிலுள்ள நான்கு தூண்கள் இலேசாயும் மிருதுவாயு மிருந்தாலும், அவ்வீட்டை நீரில் நின்று தாங்குவது போலவே, நிலத்திலுந் தாங்கும் பலமுடையன. வீட் டெஜமானே தன்மேல் ஏதாவது தாக்கினால், தன் தலையை அவ்வீட்டிற்குள் மறைத்துவிடுவான். அவன் அவ்வீட் டுத் தூண்களையே தனக்குக் கால்களாய் உபயோகிப் பான். யாதேனும் ஆபத்து வந்தால் அவன் தன் தலை யையும் தூண்களையும் வீட்டுக்குள் நுழைத்து மறைத்து வைக்கும் ஜாலமுடையவன். அவ்வீட்டை மல்லாத்தி வைத்தால் எஜமானால் அசையமுடியாது. அந்த விநோத வீடு எது? அவ்வீட்டெஜமான் யார்?

மரத்தின் இலையை அல்லது கிளையின் இலையை இணைத்து, எவ்வகை யாதாரமும் அஸ்திபாரமுமில்லாமல் அந்தரமாய் நிற்கும்படி விசித்திரமாய்க் கட்டப்பட்ட



சிறிய வீடொன்றுண்டு. அதற்கு வாசல் ஒன்றே. அவ் வீடு காற்றடித்தாலும் விழாதபடி உலர்ந்த புல் ஓலை முத லானவைகளால் அதிக சாமர்த்தியமாகச் செய்திருக் கிறது. அதைக் கட்டின சிற்பிக்குக் கைகளில்லை, கால்க ளுண்டு. அச்சிற்பி தன் வீட்டை எந்த ஆயுதங்களு

மின்றித் தன் கால்களாலும் மூக்கினாலும் வாயாலுமே கட்டி முடித்தான். அவ்வீடு சுமார் ஒரு அடி உயரமுள்ளது. அவ்வீட்டைப் பார்த்திருக்கிறீர்களா? அதன் பெயரென்ன?

பூமிக்குள் வெகு விநோதமாய்க் கட்டிய நிலவறை வீடு ஒன்றுண்டு. அவ்வீட்டிற்குள் அநேக பண்டசாலைகளும், ஆயிரக்கணக்கானோர் வசிக்கு மிடங்களுமுண்டு. அதற்குள் பல நிலவறை வழிகளிருக்கின்றன. அது வெயில் படாமலும், வெள்ளம் வாராமலும், அந்நியர் நுழையாமலும் தக்க அரண் கட்டப்பட்டிருக்கிறது. மேற்கூறிய நிலவறைகளும்வழிகளும் அரணும் கையில்லா விவேகமுள்ள சிற்பாசாரிகளாற் மண்வெட்டி கடப்பாறை முதலிய கருவிகளொன்றுமில்லாமல் வாயினால்மாத்திரம் செய்யப்பட்டன. அந்நிலவறை எது? அதைச் செய்த சிற்பாசாரிகள் யாவர்?

மனிதருடைய தலையைப்போலவும், ஒரு பெரிய மாம்பழத்தை ஒருபக்கங் குடைந்தெடுத்தாற்போலவும் வடிவுள்ளதான ஒரு வீடுண்டு. அது நீருக்குள் எப்போதும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவ்வீட்டில் வசிப்போன் பிழைக்கமாட்டான். அது தூண்களில்லாமல் ஒரே ஒரு கல்லால் அமைந்திருக்கிறது. அது உள்ளும் புறம்பும் வெள்ளை நிறமுடையது. வீட்டிலிருப்பவனுக்கோ கையுமில்லை காலுமில்லை. அவ்வாறிருந்தும் அவன் தன் வீட்டை நினைத்தவிடமெல்லாங் கொண்டு போவான். அவ்வெஜமான் இறந்தபின் அவ்வீட்டின் முகத்துவாரத்தில் ஊதினாற் பேரொலி பிறக்கும். அவ்வீடு யாது?

## 27. சுகவழி

நம்முடைய உடல் சோறு, ரொட்டி, அடை, அப்பம், காய், கனி, பால், தயிர், வெண்ணெய், நெய், கறி, மச்சம்

இவை முதலிய உணவுப்பொருட்களை இரைப்பையில் ஜீரணித்துக்கொண்டு வளரும்.

இரைப்பையில் உண்டாகும் அன்னுபேக்ஷைக்குப் பசி என்று பெயர். காற்று வீசும் இடங்களில் சரீர அப்பியாசம் செய்தால், பசி நன்றாய் எடுக்கும். அப்படிப் பயிற்சி செய்துவந்தபிறகு, ஆகாரம் ஏற்றுக்கொண்டால், நமக்கு மிக்க நலமாயிருக்கும். ஆயினும், 'அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு ஆம்' என்பதைப்போல இரைப்பை ஏற்றுக்கொண்டு ஜீரணப்படுத்தக்கூடாதபடி அளவுக்கு மிஞ்சி உண்பது கெடுதியை உண்டாக்கும். அளவுக்கு மிஞ்சி உண்பதைப்போலவே அடிக்கடி உண்பதும், அளவுக்குக் குறைவாக உண்பதும் ஆகாது.

திரவமான பொருள்களைக் குடிக்க வேண்டுமென்னும் ஆவலே தாகம். எவர்களுக்கும் பானத்திற்கு ஏற்றது நல்ல தண்ணீரே. தேத்தண்ணீரும் காப்பியும் மிதமாக ஏற்றுக்கொண்டால், ஆரோக்கியம்தான். கள்ளு, சாராயம் முதலான லாகிரி வஸ்துக்களைக் குடித்து, அநேகர் சரீர சௌக்கியத்தையும், கைப்பொருளையும், ஆத்துமாவையும் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். அவைகளைத் தொடாமல் இருப்பதே நல்லது.

அதிகமாய்ப் பரவுகின்ற வைசூரி, விஷபேதி, சுரம் இவைதாம் கொள்ளைநோய்கள். இவைகளைத் தடுக்க நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய சில உள.

அவையாவன:—

1. வீடுகளை நன்றாய்க் கழுவி வெள்ளையடித்து, குப்பை, செத்தை, சாக்கடைத்தண்ணீர் முதலாகிய அழுக்கை வீடுகளில் தங்கவிடாமல் அப்புறப்படுத்துதல் வேண்டும். ஜலதாரைகளையெல்லாம் எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். வீடுகளுக்கு அருகே நாற்றமுள்ள குப்பை கொட்டிக்கிடக்கிறதினுல் அநேகருக்கு வியாதி உண்டாகும்.

2. சரீரத்தைச் சுத்தமாயும், சூடாயும் வைத்திருத்தல் வேண்டும்.

3. ஏற்ற ஆகாரமே உண்ணவேண்டும். பழஞ்சோறும், நன்ருய்ப் பழுக்காத பழங்களும், அழுகிப்போன பழங்களும் உடம்புக்கு ஆரோக்கியமானவை அல்ல.

4. சமைக்கிற தண்ணீரும் குடிக்கிற தண்ணீரும் சுத்தமாயிருக்கவேண்டும்.

5. ஈரத்துணியோடு நெடுநேர மிருக்கலாகாது. ஈரமான இடங்களில் படுக்கலாகாது. அளவுக்கு மிஞ்சியுண்ணலாகாது. அகாலங்களிலு முண்ணலாகாது.

6. அதிகமாய்த் தூக்கம் விழிக்கலாகாது. அதிகமாய்ப் பனியில் திரிதலாகாது. அதிக ஆயாசத்திற்கும் இடம் கொடுக்கலாகாது.

7. வீணுன மனக்கவலைகொண்டு வருந்தலாகாது.

8. அனைவரும் அம்மை குத்திக்கொள்வது நலம். இது வெகுவாய் வைசூரி வரவொட்டாமல் தடுக்கின்றது; தப்பி வந்தாலும், அதை வெகு லேசாய்ப் போகும்படி செய்கின்றது.

9. உண்ணும் உணவை, வாயில் இட்டு விழுங்கிவிடாமல், நன்ருய் மென்று மென்று அரைத்து விழுங்கவேண்டும்.

10. துர்நாற்றம் உள்ள இடங்களின் அருகே போய் இருக்கலாகாது.

11. அழுக்குத் துணிகளைக் கட்டிக்கொள்ளலாகாது.

12. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்மைக் காத்தருளக் கடவுளைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

## 28. வச்சிரக்கல் (முதலாம் பாகம்)

மத்திய இந்தியாவிலுள்ள ஒரு மலையில் ஒருவிதமான களிமண் உண்டு. அந்த மண்ணில் கடலையத்தனை ஓர் கல் இருந்தது. அது முதலில் பார்வைக்குக் கறுப்பும் கரடுமாயிருந்தாலும், சாமானிய கற்களைப்போல இல்லாமல்

லட்சக் கணக்கான ரூபாய் விலையுள்ளதும், ராஜாக்கள் விரும்பத்தக்கதுமான வச்சிரக்கல்லாய் இருந்தது. அது அநேக வருஷங்களாக அக்குன்றில் இருந்தாலும் அவ்விடத்திற்கு மனுஷர் போகாததினால் அப்படியே மண்ணிலே இருந்ததென்று நாம் நினைக்கவேண்டும். இப்படியிருக்க ஒருநாள் அந்த நாட்டில் பூகம்பம் உண்டானது. பிற்பாடு கடும்புயல் வீசிப் பெருமழை பெய்ததினால் மலைச்சார்பு வழியாய்ப் பெருவெள்ளம் பள்ளத்தாக்குகளில் பாய்ந்தது. அந்த வெள்ளம் அந்த மலைக்காட்டிலுள்ள யானை, சிங்கம் முதலிய விலங்குகளையும், மரஞ்செடி முதலிய தாவரங்களையும் சிறிய பெரிய கற்களையும் வாரிக்கொண்டு போனது. இப்படிப் புரண்டு உருண்டு போனவைகளில் இந்த வச்சிரக்கல்லும் ஒன்று. இந்த ஜலப்பிரவாகம் கோதாவரி நதியிற் சேர்ந்து அநேக மைல் சென்று சமுத்திரத்தில் விழுந்தது. கோடைகாலமான போது அந்த நதியின் ஜலம் வற்றினது. அந்த வச்சிரக் கல்லோ ஒரு பாறையின் வெடிப்பிலே சிக்கி அநேக நாட் கிடந்தது. அவ்விடத்தில் எத்தனையோ பேர் சாயங்கால வேளைகளில் ஆற்றோரத்தில் உலாவி அந்தப் பாறையில் உட்கார்ந்திருப்பதுண்டு. ஆனால் இந்த அருமையான கல் அங்கே யிருப்பதை யார்தான் அறிவார்? அது மற்றப் பொடி கற்களைப்போலவே தோன்றியிருக்கும். இப்படி இருக்கையில் ஒருநாள் ஒரு அரிப்புக்காரன் கையிற் பறி வைத்துக்கொண்டு ஆற்றோரமாய்க் கீழே கற்களையும் மண்ணையும் பார்த்தபடியே நடந்துபோகும்போது இந்த வச்சிரக்கல்லை அவன் கண்டு பிரமிப்படைந்து, அதைக் கையில் எடுத்தான். இது சாதாரணக் கல் அல்ல, வச்சிரம் என்றறிந்து, அங்கே யாராவது நிற்கிறார்களோவென்று அஷ்டதிசையும் பார்த்து, அதைத் தன் மடியிற் போட்டு திரும்பவும் கீழிருக்கும் கற்களையும் மண்ணையும் பார்த்துக்கொண்டு போனான். அவன் அந்தக் கல் எடுத்த

விடத்திலிருந்து கொஞ்சம்தூரம் போனபிறகு, சமீபத்தி லுள்ள ஓர் மரச்சோலைக்குட் சென்று அக்கல்லைக் கையில் எடுத்து, மறுபடியும் பார்த்து, 'சந்திரனின் ஒளி சூரிய னுக்குமுன் எம்மாத்திரம்! அதைப்போல் எல்லா இரத்தி னங்களும் இக்கல்லுக்கு ஈடாகா' என்று அறிந்து அதைத் தன் துணியில் முடிந்துகொண்டு அங்கிருந்து அதிக தூர மான தேசத்திற்குச் சென்றான். பின்பு காடு, வனம், ஆறு முதலிய இடங்களைத் தாண்டிக் கடைசியாய் ஒரு பெரிய நகரத்தைச் சேர்ந்து அங்குள்ள அரசனைத் தரிசிக் கும்படி போனான். அவன் பிரயாணஞ்செய்து அலுத்துப் போனதினாலும், உடுக்க நல்வஸ்திரம் இல்லாததினாலும் கேவலமான கோலத்தோடு ராஜமாளிகையின் வாசலைச் சேர்ந்தபோது, வாசல் காப்போன் அவன் உட்பிரவே சிக்க இடங்கொடுக்கவில்லை. அவனோ ராஜாவை எப்படி யும் பார்க்கவேண்டுமென்று பிடிவாதமாய் நின்றபடி யினால் கடைசியாய் அந்த வாசல் காப்போன் உள்ளே செல்வதற்கு அவனுக்கு உத்தரவு கொடுத்தான். அரிப் புக்காரன் மாளிகைக்குட் சென்று ராஜாவை வாழ்த்தி னான். ராஜா அவனையும் அவன் கோலத்தையும் கண்டு அவன்மேல் வெறுப்புற்றவராய், 'இந்தப் பைத்தியக்கா ரன் நமது சமுகத்தில் எப்படி வந்தான்?' என்று நினைத் தான். அரிப்புக்காரன் தன் துணியில் முடிந்து வைத் திருந்த அந்தக் கல்லை எடுத்து ராஜாவை நோக்கி, 'மகா ராஜாவே! என் கையிலிருக்கும் கல்லைப் பாருங்கள். முத லில் அதின் தோற்றத்தால் அதின் தன்மையை அறியீர் கள். ஆனால் இந்தக் கல்லிழைக்கும் கன்னாரிடம் கொடுத் துப் பரிசோதித்தால் அதின் அழகையும் அருமையையும் காண்பீர்கள்' என்று உறுதியோடு சொன்னான்.

ராஜா, 'இவன் பளபளப்பாயிருக்கிறதெல்லாம் பொன் என்றல்லவோ நினைத்து என்னையும் ஏய்க்க வந்தான்' என்று சொல்லி, அதை வாங்கி, 'இது வச்சிரக்கல்லானால்

நீயும் உன் வமிசமும் ஆண்டு அனுபவிக்கும்படி பெரிய கிராமம் ஒன்று இனுமாகக் கொடுப்பேன். அப்படி இல்லாவிட்டால் நீ மிதியுண்டு சாகும்படி யானையின் காலின்கீழ்ப் போடுவிப்பேன்' என்று சொன்னுன். பிறகு அக்கல்லை ராஜா இரத்தினப் பரீட்சையில் நிபுணர் ஆன வர்களிடம் கொடுத்தான். அவர்கள் முதலில் அதன் நிறத்தைக் கண்டவுடன் அதைக் கொண்டுவந்து கொடுத் தவனைப் பரிகாசம் செய்தார்கள். அவனே அவர்களை நோக்கி, 'அதை இழைத்துப்பாருங்கள்' என்று பயமின் றிச் சொன்னுன்.

அவர்கள் அதைச் சாணையில் இழைக்கும்போது அதிக நுட்பமாய் உற்றுப் பார்ப்பான். அவர்கள் அதை இழைக்க இழைக்க அவர்கள் சந்தேகம் நீங்கிற்று. அப் போது அவர்கள் ராஜாவை நோக்கி, 'இந்த வக்சிரக்கல் லைப்போன்ற இரத்தினம் எந்த ராஜாக்களிடமும் இல்லை' என்று சொன்னுர்கள். ராஜாவும் அவ்வச்சிரக்கல் சூரிய காந்தியிலும் அதிக பிரகாசமுள்ளதென்று கண்டு, 'இந் தக் கல்லைக் கொடுத்தவன் பைத்தியகாரன் அல்ல, இரத் தினப் பரீட்சையில் சமர்த்தன்' என்று அவனை மெச்சி ஒரு பெரிய ஜமீனை அவனுக்கு இனுமாகக் கொடுத்து அவ்வச்சிரக்கல்லைத் தன் தலைப்பாகைச் செண்டில் அணிந் திருந்தான்.

## வச்சிரக்கல் (இரண்டாம் பாகம்)

சில மாதங்களுக்குப் பிற்பாடு மத்தியான வேளையில் ராஜா தம்முடைய அரமனை மாடியின்மீது சத்துருக்கள் உட்செல்லக்கூடாத இடத்தில் ஓர் ஊஞ்சலில் படுத்துத் தூங்கினுன். அவ்வூஞ்சலில் அவன் படுத்த நிமிஷமே சத்துருக்கள் அவனுக்கு யாதொரு விக்கினமுஞ் செய் யாதபடி சேவகர்கள் அதை மேலே சங்கிலிகளினுல் இழுத்துக் கட்டுவார்கள். அரசன் தான் படுக்கிறதற்கு

முன் தனது பாகையைக் கழிற்றிப் பக்கத்தில் வைத்திருந்தான். அவன் சிறிதுநேரம் தூங்கி விழித்தபோது பாகையிலிருந்த வச்சிரம் அதிலே இல்லாததைக் கண்டு அதிக உக்கிரங்கொண்டவனாய்த் தனது வேலைக்காரரை அழைத்தான். அவர்கள் திகில் பிடித்து, நடுநடுங்கி அரசன் முன்னிலையில் வந்து நின்றார்கள். அவன் அவர்களைப் பார்த்து, சீறிச் சினந்து, 'நான் தூங்குஞ் சமயத்தில் நீங்களே எனது பாகைமீது பதித்திருந்த வச்சிரக் கல்லைத் திருடினீர்கள். எனது அரமனை மெத்தையின் மேல் மற்றத் திருடர்கள் தெரியாமல் வருவதற்கு வழியில்லை. அது காணாதுபோன நேரமும் பட்டப்பகல். திருடர் வந்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும் அவர்கள் ஊஞ்சலண்டை ஏறிவரும் சத்தம் கேட்டு நான் எழுந்திருப்பேனே. அப்படியும் இல்லை. ஆதலால் உங்களில் ஒருவன் வச்சிரக்கல்லைத் திருடினான் என்பது நிச்சயம். அவன் அக்கல்லைக் கொண்டுவந்து கொடுத்தால் நான் அவனை மன்னித்துவிடுவேன். மூன்று நாளைக்குள் என் வச்சிரத்தைக் கொடாதுபோனால், நீங்கள் எல்லாரும் கழுமரத்திற்கு இரையாவீர்கள்' என்று சொல்லிப் பயமுறுத்தி அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்தான். அவர்கள் தங்களுக்கு நேரிட்ட ஆபத்தையும் மோசத்தையும் நினைத்துப் புலம்பினார்கள்.

இப்படியிருக்க மூன்றாம்நாட் காலையில் சிறையிலடைபட்டிருந்த சேவகர் அன்றையதினம் தங்கள் பிராணன் நாசமடையப்போகிறதே என்று துக்கித்துக்கொண்டிருக்கும்போது, அவர்களிலொருவன் அச்சிறைச்சாலையின் பக்கத்தில் ஒரு பெரிய விருக்ஷத்தின்மேல் சில பக்ஷிகள் கீச்சுக் கீச்சென்று கத்திக் கொப்பிலிருந்து கொப்புக்குத் தத்திப் பறக்கிறதையும், அம்மரத்தில் ஒரு குரங்கு ஏறி அந்தப் பக்ஷிகள் அம்மரப்பொந்தில் இட்டிருந்த முட்டைகளை எடுக்கிறதையுங் கண்டு மற்றச் சேவகர்களை நோக்கி,

'அந்தப் பக்ஷிகளைப் பாருங்கள்!' என்று கூவினான். அவர்கள், 'இவன் விநோத காக்ஷியைப் பார்க்கிறான். நாங்களோ கூற்றன் சமீபத்தில் வந்துவிட்டானே யென்று மனமிடிந்து நிற்கிறோம்' எனச் சொல்லி அவனை வைதார்கள்.

அச்சமயத்தில் ராஜாவின் ஏவலாளர் வந்து அவர்களைக் கழுவேற்றுவதற்குப் பலவந்தமாய் இழுத்துக் கொண்டுபோய், ராஜா, பிரதான மந்திரி இவர்கள் முன்பாக நிறுத்தினார்கள். இப்படி அவர்கள் நிற்கும்போது, ஒரு குரங்காட்டி ஜாலவித்தை காட்டும் சாமான்களோடு வந்து நின்றான். இக்குரங்காட்டி அந்தப் பட்டணத்தில் வந்து சில நாட்களாக அதிக விநோதமாக ஜாலவித்தைகள் செய்கிறானென்று ராஜா கேள்விப்பட்டு, தமது மாளிகைக்கு வந்து விநோத வித்தைகள் காட்டும்படி அந்த நாளை ஏற்கனவே குறித்திருந்தான். ராஜ கட்டளையின்படி அவன் வந்து விசனத்தோடு, 'மகா ராஜாவே! தங்கள் சொற்படி வந்திருக்கிறேன். நான் செய்யும் அரிய விநோதங்களுக்காகத் தங்களிடமிருந்து சிறந்த வெகுமதி பெறுவேனென்றிருக்க என் குரங்கோ காணமற் போயிற்று. சில வேடரை அனுப்பி அதைப் பிடித்துத் தந்தால் நவமான விளையாட்டுகள் காண்பிப்பேன்' என்றான்.

அதுகேட்டுக் கழுவேற்றும்படி நிறுத்தப்பட்டவர்களில் குரங்கைப் பார்த்தவன் தான் அக்குரங்கைச் சிறைச்சாலையின் பக்கத்திலுள்ள விருட்சத்தில் பார்த்ததையும், அது பக்ஷிகளைத் தொந்தரவு செய்ததையும் பற்றிச் சொன்னான். இதைக் கேட்டுப் பிரதான மந்திரி அன்று காலையில் சேவகர்களைக் கழுவேற்றுவதை நிறுத்தி வைக்கும்படியாக ராஜாவிடம் விண்ணப்பம் செய்தான், ஏனென்றால் வச்சிரம் போன வழி எப்படி என்றதைப் பற்றி இப்போது அவன் மனதில் புலப்பட்டது. வச்சிரம்

காணுமற்போன சங்கதியையும், குரங்கு பக்ஷிகளுக்குச் செய்த கெடுதியையும் ஒருமித்துக் கேட்டு, அக்குரங்கிருந்த மரப்பொந்தைப் பார்த்து வரும்படி ஆட்களை அனுப்பினான். அவர்கள் போய்த்தேடினபோது வச்சிரம் அங்கிருந்ததைக் கண்டு, எடுத்துவந்து ராஜன் கையில் கொடுத்தார்கள். அப்போது ராஜா அக்குரங்குதான் படுத்திருந்த மேல்மெத்தையில் நிலாமுற்றத்தின் வழியாய் வந்து திருடிப்போனதென்று அறிந்து, தான் விருதாவாய் ஜீவவதை செய்யத் துணிந்ததையும், தன் கோபத்தையும் நினைத்து வெட்கமும் துக்கமும் உள்ளவனாய், மந்திரியின் புத்தியை மெச்சி, அரண்மனைச் சேவகர்களுக்குத் தகுந்த வெகுமானமும் அளித்தான்.

## 29. பிரார்த்தனை

பரமபிதாவாகிய கடவுள் அநேக ஈவுகளை யனுதினமும் அருளுகிறார். புத்தி, தேகபலம், பள்ளித்தோழரின் சிநேகம் முதலியவை அவர் கிருபையைக் காட்டும். இந்த நன்மைகளுக்காகக் கருணாகரனாகிய அவருக்கு நாம் துதிசெலுத்தாமலிருக்கலாமா?

இவ்வுலகத்தில் நாம் உண்மையுள்ளவர்களாயும், சுறுசுறுப்புள்ளவர்களாயும், தீமையை விலக்கி, நன்மையைச் செய்கிறவர்களாயும் இருப்பதற்குக் கடவுள் உதவி நமக்கு வேண்டும். அவ்வுதவியை நாம் அனுதினமும் கேட்கவேண்டும்.

இவ்விதம் நன்றி பாராட்டவும், உதவி தேடவும் சற்குருவாகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தி லிருந்தபோது தமது சீஷருக்கு அடியிற் காட்டியிருக்கிற பிரார்த்தனையைச் சொல்லிக்கொடுத்தார்:—

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும்

செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்றும் எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

தினந்தோறும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லுவதுமின்றி, நமக்கவசியமான யாவற்றையும் காலையிலும் மாலையிலும் கடவுளிடம் கேட்கவும் வேண்டும். மாதிரிக்கான சில பிரார்த்தனைகளை அடியில் காட்டியிருக்கிறோம்.

## காலை விண்ணப்பம்

ஆண்டவரே! நேற்று இரவில் என்னைக் காப்பாற்றி, இன்று பகலைக் காணும்படி கிருபை செய்ததற்காக உம்மைத் துதிக்கிறேன். நான் செய்த பாவங்கள் கணக்கில்லாதவைகள். அவைகள் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவினிமித்தம் மன்னித்து, உம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு எனக்குள் சுத்த இருதயத்தைச் சிருஷ்டித்தருளும். இன்று பகலில் நான் பாவஞ்செய்யாதபடி என்னைக் காத்து, நன்மை செய்யும்படி ஏவியருளும். என் சிநேகிதரையும் பந்துக்களையும் ஆசீர்வதித்து, அவர்களும் சகல மனுஷரும் உம்மை அறிந்து உம்மில் அன்புகூரும்படி அருள்புரியும். இந்த விண்ணப்பத்தை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அனுக்கிரகித்தருளவேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

## மாலை விண்ணப்பம்

கிருபையுள்ள கர்த்தாவே! இன்று இரவில் அடியேனைக் கண்ணோக்கிப் பாரும். கடந்த பகலில் என் நினைவாலும், வார்த்தையாலும், செய்கையாலும் நடப்பித்த பாவங்களையெல்லாம் இயேசுகிறிஸ்துவினிமித்தம் தயவாய் மன்னித்தருளும். உம்முடைய பரிசுத்த ஆவியானவர் என் இருதயத்தைச் சுத்தமாக்குவாராக. என் சிநேகிதரையும், சகல மனிதரையும் ஆசீர்வதித்தருளும். இன்று இராத்திரியில் நேரிடும் சகல விக்கினங்களுக்கும் மோசங்களுக்கும் என்னை விலக்கிக் காத்து, நான் உயிரோடிருக்கும் காலமெல்லாம் உமக்குப் பிரியமாய் நடந்துவரும்படி என்னை ஏவி, நான் மரிக்கும்போது, என் ஆத்துமா உம்மோடு சதாகாலமும் வாழ்ந்திருக்கக் கிருபை செய்யும். இவைகளை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆமென்.

## செய்யுட் பாடம்

அதிவீரராம பாண்டியன் செய்தருளிய

நறுந்தொகை என்று வழங்கும்

# வெற்றி வேற்கை

(சுருக்கம்)

1. கல்விக்கழகு கசடறமொழிதல்.
2. செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்.
3. மன்னவர்க்கழகு செங்கோன்முறைமை.
4. மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்.
5. அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்.
6. வறியோர்க்கழகு வறுமையிற்செம்மை.
7. தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
   வானுறவோங்கி வளம்பெறவளரினும்
   ஒருவர்க்கிருக்க நிழலாகாதே.
8. தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
   தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன்சினையினும்
   நுண்ணிதேயாயினு மண்ணல்யானை
   அணிதேர்புரவி யாட்பெரும்படையொடு
   மன்னர்க்கிருக்க நிழலாகும்மே.

9. உற்றோரெல்லா முறவினரல்லர்.

10. அடினுமாவின்பா றன்சுவைகுன்றாது
சுடினும்செம்பொன் றன்னொளிகெடாது
அரைக்கினுஞ்சந்தனந் தன்மணமறாது
புகைக்கினுங்காரகில் பொல்லாங்குகமழாது
கலக்கினுந் தண்கடல் சேறாகாது.

11. பெருமையுஞ்சிறுமையுந் தான்றரவருமே.

12. சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பதுகடனே.

13. சிறியோர்பெரும்பிழை செய்தனராயிற்
பெரியோரப்பிழை பொறுத்தலுமரிதே.

14. நூற்றாண்டுபழகினு மூர்க்கர்கேண்மை
நீர்க்குட்பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

15. ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை
இருநிலம்பிளக்க வேர்வீழ்க்கும்மே.

16. கற்கைநன்றே கற்கைநன்றே.

17. பிச்சைபுகினுங் கற்கைநன்றே.

18. கல்லாவொருவன் குலநலம்பேசுதல்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே.

19. எக்குடிபிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடிகற்றோரை மேல்வருகென்பர்.

20. அச்சமுநாணமு மறிவிலோர்க்கில்லை.

21. உடைமையும்வறுமையு மொருவழிநில்லா.

22. குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்.

23 அறத்திடுபிச்சை கூவியிரப்போர்
அரசோடிருந்தர சாளினுமாளுவர்.

24. தறுகண்யானை தான்பெரிதாயினுஞ்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ்சும்மே.

25. குன்றுடை நெடுங்கா டூடேவாழினும்
புன்றலைப்புல்வாய் புலிக்கஞ்சும்மே.

26. ஆரையாம்பள்ளத் தூடேவாழினுந்
தேரைபாம்பிற்கு மிகவஞ்சும்மே.

27. கொடுங்கோன்மன்னர் வாழுநாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே.

28. வித்துமேரு முளவாயிருப்ப
எய்த்தங்கிருக்கு மேழையும்பதரே.

29. தன்னாயுதமுந் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற்கொடுக்கும் பேதையும்பதரே.

30. பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே.

31. மெய்யுடையொருவன் சொலமாட்டாமையாற்
பொய்போலும்மே பொய்போலும்மே.

32. பழியாவருவது மொழியாதொழிவது.

33. துணையோடல்லது நெடுவழிபோகேல்.

34. வழியேயேகுக வழியேமீளுக.

35. இவைகாணுலகிற் கியலாமாறே.

கல்விச் செல்வியாகிய

ஔவையார் அருளிச்செய்த

# மூதுரை

(சுருக்கம்)

1. நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப்போற் காணுமே—யல்லாத
வீரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகார
நீர்மே லெழுத்திற்கு நேர்.

3. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

4. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

5. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

6. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகி
னல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

7. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

8. சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

9. உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—யுடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கு
மம்மருந்து போல்வாரு முண்டு.

10. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்கு
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

# நறுந்தொகை அரும்பத விளக்கம்

—oo:§:oo—

எண்கள் பாட்டின் எண்கள்

அகில், (10) அகிற்கட்டை.
அச்சம், (20) பயம்.
அடினும், (10) காய்ச்சினாலும்.
அணி, (8) அழகு.
அண்ணல், (8) பெருமைதங்கிய.
அரசு, (23, 26) இராஜனுக்குள்ள சிறப்பு.
அரைக்கினும், (10) தேய்த்தாலும்.
அற, (1) நீங்க.
அறம், (23) தருமம்.
ஆ, (10) பசு.
ஆண்டு, (14) வருஷம்.
ஆம், (26) ஜலம்.
ஆரை, (26) நீர்ப்பூண்டு.
ஆறு, (35) வழி.
இயலாம், (35) நடத்தலாகிய.
இரப்போர், (23) யாசிப்போர்.
இரும், (15) பெரிய.
உடைமை, (21) செல்வம்.
உற, (7) இருக்க, தாவ.
உறவினர், (9) பந்துக்கள்.
உற்றோர், (9) பந்துக்கள்.
ஊடே, (25) இடையே.
ஊர்ந்தோர், (22) சவாரி செய்தோர்.
எய்த்து, (28) சோம்பலடைந்து.
ஏகுக, (37) போவீர்களாக.
ஓங்கி, (7) உயர்ந்த.

கசடு, (1) குற்றம்.
கண், (24) கணு.
கமழாது, (10) வாசனை வீசாது.
கயம், (8) குளம்.
கற்கை, (16, 17) படித்தல்.
காண், (35) தான்.
கார், (10) கருமையாகிய.
கிளை, (2) பந்துக்கள்.
குஞ்சரம், (22) யானை.
குன்று, (25) மலை.
கேண்மின், (29) கேளுங்கள்.
கேண்மை, (14, 15) சிநேகம்.
சான்றோர், (29) கல்வியும், நல்ல நடக்கையும் உடையவர்.
சினை, (8) முட்டை.
செம்பொன், (10) தங்கம்.
செங்கோல், (3) நீதியோடு ஆளுதல்.
செல்வர், (2) பணமுள்ளவர்.
செழும், (2) வளம்பொருந்திய.
தண், (10) குளிர்ச்சியாகிய.
தறுகண், (24) அஞ்சாமை, குரூரம்.
தெண்ணீர், (8) தெளிவான தண்ணீர்.
தெள்ளிய, (8) பளபளப்பான.
தேம்படு, (7) தித்திப்பான.
நண்ணுதல், (22) சேர்தல்.
நலம், (18) சிறப்பு.

நுண்ணிது, (8) சிறியது.
நெடுவழி, (33) அதிக தூரம்.
படை, (8) சேனை.
பழி, (32) நிந்தை.
புகினும், (17) போனாலும்.
புரவி, (8) குதிரை.
புன்றலை, (25) அற்பத்தலை-சிறிய தலை.
புல்வாய், (28) கலைமான்.
மணம், (10) வாசனை.
மன்னவர், (3) இராஜாக்கள்.
மீளுக, (34) திரும்புக.
மொழிதல், (1) சொல்லுதல்.
மொழியாது, (32) சொல்லாமல்.
வருக, (19) வாரும்.
வளம், (7) செழுமை.
வறியோர், (6) தரித்திரர்.
வறுமை, (6, 21) தரித்திரம்.
வன்மை, (30) திறமை.
வான், (7) ஆகாயம்.
வித்து, (27) விதை.
வீழ்க்கும், (15) ஊன்றி நிற்கும்.

ஆவணக் காப்பகம் ... சென்னை-600 008
126807

## மூதுரை அரும்பத விளக்கம்

அட்டாலும், (3) காய்ச்சினாலும்.
அல்லாதார், (8) அல்லாதவர்.
ஈந்த, (2) செய்த.
ஈரம், (2) அன்பு.
உடைந்தக்கால், (8) தகர்ந்தால்.
உளரேல், (6) இருப்பாரானால்.
என்று, (1) எப்பொழுது.
கல்லாதான், (7) படியாதவன்.
கற்றோனும், (10) படித்தோனும்.
கானம், (7) காடு.
சீரிய, (8) சிறந்த.
சீரியர், (8) பெரியோர்.
சீர்தூக்கின், (10) ஆராய்ந்து பார்த்தால்.
செய்தக்கால், (1) செய்தால்.
தருங்கொல், (1) கிடைக்குமோ.
தளரா, (1) சோர்வடையாமல்.
தன்றேசமல்லாற், (10) தனது நாடு அல்லாமல்.
தாள், (1) அடி.
திரு, (5) அழகு.
தெங்கு, (1) தென்னமரம்.
தொல், (6) பழமை.
நட்டாலும், (3) நேசித்தாலும்.
நண்பு, (3) சிநேகம்.
நேர், (2) ஒப்பு.
பிணி, (9) வியாதி.
பொசியுமாம், (6) பாயுமாம்.
மன்னனும், (10) அரசனும்.

TB 031 N

ATR/1257

Price 60 cents